விலை ரூபா: 5.00 பக்கங்கள்:-பத்து Registered as a News paper in Sri Lanka

# வலம்புரி
VALAMPURI

சங்கு 03 வள்ளுவர் ஆண்டு 2033 பங்குனி 25 திங்கட்கிழமை (08.04.2002) தொலைபேசி 3378 ஒலி 110

O/L DAY CLASS
ஏப்ரல் 10இல்
ஆரம்பம்
பெயர் பதிவுகள்
ஏற்கப்படுகின்றன.

### புலிகளின் தளபதிகள்- அமைச்சர்கள் சகிதம்

# யாழ் – கண்டி வீதி இன்று திறப்பு

# விடுதலைப் புலிகள் யாழ் வருவர்

## மகத்தான வரவேற்பளிக்க மக்கள் அணி திரளும்

(வவுனியா நிருபரும் அலுவலக நிருபரும்)

**யாழ்ப்பாணத்திற்கும் கிளிநொச்சிக்கும் இடையிலான ஏ-9 கண்டி வீதி அமைச்சர்கள், தமிழீழ விடுதலைப் புலிகளின் முக்கிய தளபதிகள், படை உயர் அதிகாரிகள் கண்காணிப்புக் குழுத் தலைவர், அரச அதிகாரிகள் முன்னிலையில் இன்று காலை திறந்து வைக்கப்படவுள்ளது.**

**இப்பாதை திறந்துவைக்கப்படுவதை அடுத்து புரிந்துணர்வு உடன்படிக்கையின் பிரகாரம் யாழ்ப்பாணம் வரவுள்ள விடுதலைப் புலி உறுப்பினர்களுக்கு முகமாலையில் வைத்து அமோக வரவேற்பு அளிக்கப்படவுள்ளது.**

அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் ஏற்பட்டுள்ள நிரந்தர யுத்த நிறுத்தத்திற்கு வழி வகுக்கும் புரிந்துணர்வு உடன்படிக்கையின் பிரகாரம் இன்று காலை ஏ-9 பாதை திறந்து வைக்கப்படவுள்ளது.


திறப்புவிழா வைபவத்தில் அரசின் சார்பில் காணி அமைச்சர் இராஜித சேனாரட்ண, இந்து கலாசார அமைச்சர் தி. மகேஸ்வரன், இராணுவ உயர் அதிகாரிகள், நோர்வேயின் சர்வதேச கண்காணிப்புக்குழுத் தலைவர், விடுதலைப் புலிகளின் சார்பில் தளபதிகள் கேணல் பானு, கேணல் தீபன். ஆகியோரும் கலந்து கொள்கிறார்கள் என விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

விடுதலைப் புலிகளின் சார்பில் கலந்து கொள்ளவுள்ள இரு தளபதிகளும் இன்று வன்னியில் இருந்து புறப்பட்டு முகமாலைப் பகுதிக்கு வரவுள்ளார்கள்.

புரிந்துணர்வு உடன்படிக்கையைக் கண்காணிப்பதற்கு விடுதலைப் புலிகளினால் நியமிக்கப்பட்ட யாழ் மாவட்ட கண்காணிப்புக் குழு உறுப்பினர் அருட்தந்தை அரியநாயம் குரூஸும் இந் நிகழ்வில் கலந்து கொள்வார்

இப் பாதை திறப்பதற்கு வசதியாக முகமாலையில் மூன்று கொட்டில்கள் சீமெந்திட்டுப் பூர்த்தியாக்கப்பட்டுள்ளதாகவும் மற்றும் மலசல கூட வசதிகள் குடிதண்ணீர் வசதிகளும் செய்யப்பட்டுள்ளதாகவும் யாழ் செயலக

(10ம் பக்கம் பார்க்க)



இன்று திறக்கப்படவுள்ள ஏ-9 பாதை...

## சர்வதேச பத்திரிகையாளர்கள் வன்னிக்குப் படையெடுப்பு

(வவுனியா)

தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வே. பிரபாகரன் நடத்தவுள்ள பத்திரிகையாளர் மாநாட்டில் கலந்து கொள்வதற்காக நூற்றுக்கும் அதிகமான சர்வதேச, உள்ளூரப் பத்திரிகையாளர்கள் வவுனியாவுக்கு படையெடுத்து வந்துள்ளனர். இவர்களில் சுமார் 50 வெளிநாட்டுப் பத்திரிகையாளர்கள் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசமான வன்னிக்குச் சென்றுள்ளனர்.

இவர்கள் யாவரும் இன்று காலை திறக்கப்படவுள்ள ஏ-9 கண்டி வீதி வழியாக யாழ்ப்பாணம் வரவுள்ளார்கள் என்று தெரிவிக்கப்படுகிறது. (வ)

### புலிகளிற்கு வரவேற்பளிக்க

### யாழ்.வரும் விடுதலைப்புலிகளை வரவேற்க

## புலிகளிற்கு வரவேற்பளிக்க யாழ். குடாநாடு விழாக்கோலம்

(யாழ்ப்பாணம்)

தமிழீழ விடுதலைப்புலிகளின் வருகையையொட்டி யாழ்குடா நாடு பெரும் விழாக்கோலம் பூண்டுள்ளது. யாழ் வரும் புலிப் போராளிகளுக்கு மகத்தான வர வேற்பளிக்க குடாநாட்டு மக்கள் தயாராகியுள்ளதுடன் பெருமெ டுப்பில் ஏற்பாடுகளும் செய்துள் ளனர். முக்கிய சந்திகள் வீதிகள் மற்றும் நகரப்பகுதியெங்கும் சிவப்பு, மஞ்சள்கொடிகளால் அலங் கரித்து விடுதலைப் புலிகளை வருக வருகவென வரவேற்கும் பதாகைகள் துண்டுப்பிரசுரங்கள் சுவரொட்டிகள் என்பனவும் பரவ லாக ஒட்டப்பட்டுள்ளன. முக்கிய சந்திகளில் விடுதலைப்புலிகளின் தலைவர் வே.பிரபாகரனின் படம் வைக்கப்பட்டுள்ளதுடன் விடுதலை எழுச்சிக் கீதங்களும் இசைக்கவிடப் பட்டுள்ளது. முகமாலைப் பகுதி யில் இருந்து புலிகளை யாழ்பாணம்

(10ம் பக்கம் பார்க்க)

### முகமாலையில் புலிகளை பல்கலை சமூகம் வரவேற்கும்

(யாழ்ப்பாணம்)

தமிழீழ விடுதலைப் புலிகளை முகமாலையில் வைத்து வரவேற் பதற்காக யாழ் பல்கலைக்கழக சமூகத்தினர் பெருந்திரளாக அப் பகுதிக்குச் செல்லவுள்ளனர். பல் கலைக்கழகத்தில் இருந்து இன்று காலை விரிவுரையாளர்கள் மாண வர்கள் செல்வதற்கு வசதியாக அவர்களை காலை 7மணிக்கு பல்கலைக்கழக முன்றலில் ஒன்று கூடுமாறு மாணவர் ஒன்றியம் வேண்டுகோள் விடுத்துள்ளது. (வ)

யாழ்.வரும் விடுதலைப்புலிகளை வரவேற்க

## வர்த்தக நிலையங்களை திறக்குமாறு வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

யாழ் குடாநாட்டுக்கு இன்று வருகைதரும் தமிழீழ விடுத லைப் புலிகளை வரவேற்கும் வகையில் யாழ் குடாநாட்டு வர்த்தகர்கள் தமது வர்த்தக நிலையங்களை திறந்து வைத்து புலிகளை வரவேற்குமாறு யாழ் மாவட்ட மக்கள் வரவேற்புக் குழு வேண்டுகோள் விடுத்துள் ளது.

இது குறித்து வரவேற்புக்குழு வின் தலைவர் பரமநாதன் நேற்று அறிக்கை ஒன்றை விடுத் துள்ளார்.

அவர் அந்த அறிக்கையில் மேலும் தெரிவித்திருப்பதாவது:

அனைத்து மனிதநேய அமைப் புக்களின் தலைவர்கள், செயலா ளர்கள் முகமாலை செல்வதற் காக இன்று காலை 7ம்மணிக்கு நல்லூர் பின் வீதியில் உள்ள

(10ம் பக்கம் பார்க்க)

## புலிகளின் முக்கியஸ்தர்களுடன் கண்காணிப்புக் குழு சந்திப்பு

### கிழக்கு மாகாண இராணுவக் கெடுபிடிகள் பற்றி ஆராய்வு

(வவுனியா)

அரசுக்கும் விடுதலைப் புலிக ளுக்கும் இடையிலான புரிந்து ணர்வு உடன்படிக்கையை கண் காணிக்கும் நோர்வேயின் சர்வ தேச கண்காணிப்புக் குழுத் தலை வர் மேஜர் ஜெனரல் ரொண்ட் பியூறு ஹெவ்டே நேற்று வன்னி யில் விடுதலைப் புலிகளின் முக் கியஸ்தர்களை சந்தித்து சுமார் 4மணி நேரம் கலந்துரையாடி யுள்ளார்.

நேற்றுக் காலை 9.30 மணிக்கு ஆரம்பமான இக்கலந்துரையாட லில் புலிகளின் சார்பில் அரசி யல் ஆலோசகர் அன்ரன் பாலசிங் கம் அரசியல் துறைப் பொறுப் பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் தள பதிகள் கருணா, பதுமன், காவல் துறைப் பொறுப்பாளர் பா.நடேசன் திருமதி அடேல் பாலசிங்கம் ஆகி யோர் கலந்து கொண்டனர்.

இக் கலந்துரையாடலின் போது குறிப்பாக கிழக்கு மாகாணத்தில் இராணுவ அரசியல் செயற்பாடு கள் மற்றும் இராணுவக்

(10ம் பக்கம் பார்க்க)

### மரதன் ஓட்டம் வவுனியா வந்தடையும்

(வவுனியா)

ஏ-9 கண்டி வீதி திறந்துவைக் கப்படுவததை ஒட்டி ஏற்பாடு செய் திருந்த சமாதானத்திற்கான மர தன் ஓட்டம், சயிக்கிள் ஓட்டம் இன்று வவுனியா வந்தடையவுள் ளது. இதை ஒட்டி வவுனியா நகரில் விசேட ஏற்பாடுகள் செய் யப்பட்டுள்ளது.

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## சிறு விளம்பரம்

### தமிழ் மூலம ஆங்கிலம்

ஆங்கில மொழியை மிக இலகுவில் கற்றிடலாம் எழுத, பேச (Fluently Speaking) வாசிக்க சிறந்த தேர்ச்சி பெறுங்கள். இது இலகுநடை. சுயமாக கற்றிடும் கற்கை நெறி, SELE STUDY COURSE மேலதிக விபரங்களுக்கு முத்திரை ஒட்டிய கவருடன் தொடர்பு கொள்க: K. N. R. 39, கே. கே. எஸ். வீதி, கொக்குவில்.

(4942)

### கணிதம்

தரம் 1-O/L வரை கட்டாய பாடமாகிய கணித பாடத்தினை 37 வருட அனுபவமுடைய ஆசிரியரினால் ஆரம்ப அறிவிலிருந்து 40 மணித்தியாலங்களில் Dlstinction பெறுபேறடையக் கற்பிக்கப்படும். காலை 6.00-9.00 இற்குள் சந்திக்கவும். க. ஆறுமுகநாதன் 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, சுண்டுக்குளி.

(4949)


# புலிகளின் தலைமைத்துவத்தை ஏற்கும் யாழ். மக்களுடன் நாமும் இணைகிறோம்

## யாழ். கத்தோலிக்க மறைமாவட்டம் அறிக்கை

(யாழ்ப்பாணம்)

தமிழ்மக்களின் உரிமைப் போராட்டத்திற்கு தலைமைத்துவம் வகிக்கதகுதியானவர்கள் விடுதலைப்புலிகள்என்பதை கடந்த பொதுத் தேர்தல் மூலம் வெளிப்படுத்திய யாழ்ப்பாண மக்களுடன் நாமும் ஒன்றிணைகின்றோம்.

யாழ். மண்ணில் இன்று பிரவேசிக்கும் விடுதலைப்புலிகளை வரவேற்கும் முகமாக யாழ். கத்தோலிக்க மறைமாவட்டத்தினர் விடுத்த அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது

பல ஆண்டுகளாக நடந்து வரும் எமதுஉரிமைப்போராட்டத்தின் வளர்ச்சிப் பரிமாணமாக, இப்போதுபுரிந்துணர்வு ஒப்பந்தம் வழியாகப் பேச்சுவார்த்தை மூலம் முரண்பாட்டுத் தீர்வு காணும்முயற்சியில் விடுதலைப் புலிகள் அமைப்பு இறங்கி, அதை முன்னெடுத்துச் செல்வதற்காக யாழினுள் நுழையும் இந்த வேளையில், யாழ். கத்தோலிக்க மறைமாவட்ட நீதி சமாதான ஆணைக்குழு அவர்களைப் பெரு மகிழ்ச்சியுடன் வரவேற்கின்றது.

தலைமைத்துவமும் பொது மக்களும் ஒன்றிணைந்து நிற்பதில்தான் தமிழினத்தின் பலமும் வெற்றியும் பெரிதும் தங்கியிருக்கும் என்று எமக்குத் தோன்றுகிறது.

இக்கட்டத்திலே, மானுடத்தின் அடிப்படை விழுமியங்களில் குறிப்பாகமனிதஉரிமைகள், நீதியுடன் கூடிய நிலையான சமாதானம், ஒப்புரவு ஆகியவற்றைநாம் வலியுறுத்த விரும்புகிறோம். அடுத்து மேற்கொள்ளப்படும் தீர்வு நடவடிக்கைகளில் இவ்விழுமியங்களுக்கு முதன்மையிடம் வழங்கப்படும் என்பது எமது எதிர்பார்ப்பு.

இவற்றின் வழியேதலைவர்கள் சென்று, மக்களின் கௌரவத்தையும், சுபீட்சமான வாழ்வையும் உறுதிப்படுத்தும் நிரந்தர தீர்வுக்கு அவர்களை இட்டுச் செல்ல வேண்டுமென்று வாழ்த்தும் ஆசியும் கூறி நிற்கிறோம்.

இவ்வாறு அவ்அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(க)

# விருதலை புலிகள் ஆலோசகரின் அறிக்கை முஸ்லிம்களுக்கு நிம்மதி

## அமைச்சர் அதவுல்லா தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழழ விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன்பாலசிங்கம் கடந்தவியாழக்கிழமை வெளியிட்டுள்ள அறிக்கை முஸ்லிம் மக்களின் வாழ்வில் நிம்மதி ஏற்படுத்த வழிவகுத்துள்ளது என நெடுஞ்சாலைகள் அமைச்சர் ஏ.எல்.எம்.ஆதாவுல்லா தெரிவித்துள்ளார்.

பிரதமர் ரணில்விக்கிரமசிங்காவினாலும் விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனாலும் கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கை தொடர்பாக முஸ்லிம்மக்கள் மகிழ்ச்சியடைந்த போதிலும் அதன் உண்மைநிலை தெரியாது திண்டாடிவந்தனர்

ஆனாலும் விடுதலைப்புலிகளின் ஆலோசகர் வெளியிட்டுள்ள அறிக்கையினை அடுத்து முஸ்லிம்மக்கள் பெருமகிழ்ச்சியுடன் இருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்திலிருந்து இடம்பெயர்ந்த முஸ்லிம்மக்கள் மீளக் குடியேற்றுவது தொடர்பாக முஸ்லிம் தலைவர்களுடன் கலந்தாலோசனை செய்வது என கலாநிதி அன்ரன்பாலசிங்கம் தெரிவித்திருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (க.08)

# மாணவருக்கு பாராட்டு

(கொக்குவில்)

காரைநகரிலுள்ள பாடசாலைகளில் கற்று க.பொ.த. சாதாரணபரீட்சையில் சிறந்த பெறு பேறுகளைப் பெற்ற மாணவ, மாணவிகளை காரைநகர் வாரிவளவு நல்லிணக்கச்சபை பாராட்டி கௌரவிக்கவுள்ளது.

நாளை மறுதினம் மு.ப. 11.00 மணிக்கு இது தொடர்பாக காலநிதி ஆ.தியாகராசா ம.ம.வித்தியாலயத்தில் நடைபெறவுள்ள நிகழ்வில் தீவக கல்விப் பணிப்பாளர் பு.விக்னேஸ்வரர் கலந்து கொள்வார்.

கலாநிதி ஆ.தியாகராசா ம.ம.வித்தியாலயத்தைச் சேர்ந்த சு.சூரியகலா, சு.தவலோசனா சி.சுரேஷ்குமார், த. அசோக்குமார், ந.குகதர்சினி, கா.மனோரஞ்சிதம் சி.அனுசுயா ஆகியோரும், யாழ்ற்றன் கல்லூரியைச் சேர்ந்த ப.ஜெயதர்சினி, சு.இராஜேஸ்வரி ஆகியோரும் மேற்படி நிகழ்வில்பாராட்டிக் கௌரவிக்கப்படுவார்கள்.

அத்துடன் யாழ் பல்கலைக் கழக இசைத்துறையில் தற்காலிக விரிவுரையாளராக நியமனம் பெற்றபரமேஸ்வரி கணேசன் அவர்களும் இந் நிகழ்வில் கௌரவிக்கப்படவுள்ளார்.

(எ-243)

# பொன்விழா

## புதனன்று

(அரியாலை)

யாழ். மாநகராட்சி மன்றத்தின் பொன்விழாக் கொண்டாட்டங்கள் நாளைமறுதினம் புதன்கிழமை பி.ப 2.00 மணிக்கு மாநகரசபை அலுவலகத்தில் நகரபிதாசெ.கந்தையன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ந. இரவிராஜ் பிரதம விருந்தினராகவும்,

யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பொன். பாலசுந்தரம்பிள்ளை, யாழ். மாவட்ட அரச அதிபர்க.சண்முகநாதன், உள்ளூராட்சி ஆணையாளர் ரி.வி.கிருஷ்ணசாமி, மாவட்ட நீதிபதி ஆர். ரி. விக்னராஜா, உயர்

# அதிபர்கள் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி கல்விக் கோட்டத்தைச் சேர்ந்த பாடசாலை அதிபர்களுக்கான கூட்டம் நாளை செவ்வாய்க்கிழமை பி.ப 1. 30மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளதாக சாவகச்சேரி கோட்டக் கல்வி அதிகாரி நா. சத்தியநாதன் அறிவித்துள்ளார். (த)

# அரசாங்கத்தின் ஜனநாயக விரோத செயல் பொ.ஐ.மு பிரசாரம்செய்யும்

(கொழும்பு)

பிரதான எதிர்க்கட்சியின் தலைவர்களைக்கைது செய்து தடுத்துவைப்பதன் மூலம் அதன் தலையில் அடிப்பதற்கு அரசாங்கம் எடுத்துவரும் ஜனநாயக விரோத நடவடிக்கைகள்பற்றி சர்வதேச சமூகத்திற்கு விழிப்புணர்வை ஊட்டுவதற்கென பொ. ஐ. முன்னணியின் பாராளுமன்றக்குழு ஏழு உறுப்பினர்குழுவொன்றை அமைத்துள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை பாராளுமன்றக் கட்டடத்தில் எதிர்க்கட்சிதலைவர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் இத்தீர்மானம் எடுக்கப்பட்டது.

லக்ஷ்மன் கதிர்காமர், நிமல் ஸ்ரீபால டீ சில்வா ஜெயராஜ் பெர்ணாண்டோபுள்ளே ஆகியோர் மேற்படி குழுவிற்கு தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். பொதுநலவாய நாடுகள் உட்பட சர்வதேச நாடுகளுக்கு இலங்கை அரசாங்கத்தின் ஜனநாயகத்திற்கு விரோதமான செயல்கள், எதிர்க்கட்சியை முடங்கச் செய்யும் நடவடிக்கைகள் எதிர்க்கட்சித் தலைவர்களை கைது செய்வது என்பன குறிதது தெரிவிக்கும் பொறுப்பு இக்குழுவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (எ)

# ஆசிரியர் கலாசாலை வெற்றிடங்களுக்கு ஏற்பவே மாணவர் சேர்க்கப்படுவர்

(யாழ்ப்பாணம்)

ஆசிரியர் கலாசாலை வெற்றிடங்களுக்கேற்பவே சேவைமூப்புஅடிப்படையில் ஆசிரியர்கள் சேர்த்துக்கொள்ளப்படுவர்.

கோப்பாய் ஆசிரியர்பயிற்சி கலாசாலை அதிபர் ஐ.புவனேந்திரன் ஆசிரியபயிற்சி கலாசாலைகளுக்கு ஆசிரிய

மேலும் தெரிவிக்கையில் ஒவ்வொரு விண்ணப்பதாரியும் தாம் நியமனம்பெற்ற பாடத்திலேயே ஆசிரியபயிற்சிபெற வேண்டும்.

யாழ்மாவட்டத்தில் பயிற்றப்படாத ஆசிரியர்களின் விண்ணப்பங்கள் ஆங்கிலம் உட்பட அதிபர், கோப்பாய்


# மரண அறிவித்தல்

## சிதம்பரப்பிள்ளை பொன்னம்பலம்

உரிமையாளர்:- நியூஹிமாலயா பிஸ்கட் மன்வக்சரேஸ் - குண்டசாலை)

நெல்லியடியைப் பிறப்பிடமாகவும் கண்டியை வதிவிடமாகவும் கொண்ட சிதம்பரப்பிள்ளை பொன்னம்பலம் 06-04-2002 சனிக்கிழமை கண்டியில் காலமானார்.

அன்னார் காலஞ் சென்றவர்களான சிதம்பரப்பிள்ளை வள்ளிப்பிள்ளை (இரட்டையர் வீடு) தம்பதி

அன்னார் காலஞ் சென்றவர்களான சிதம்பரப்பிள்ளை வள்ளிப்பிள்ளை (இரட்டையர் வீடு) தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ் சென்றவர்களான இராமலிங்கம் வள்ளியம்மை தம்பதிகளின் அன்பு மருமகனும், மாசிலாமணியின் அன்புக் கணவரும், திருமதி கனகம்மா (கனடா) கனகசபை (புதுக்குடியிருப்பு) ஆகியோரின் அருமைச் சகோதரனும் திருமதி நர்மதா ஜெயந்திரன் (சிங்கப்பூர்), மோகனகிருஷ்ணன் (மாணவன், கொழும்பு), பார்த்தீபன் (மாணவன் - கண்டி) ஆகியோரின் அன்புத் தந்தையாரும், ஜெயந்திரன் (சிங்கப்பூர் ஓவாசிக் கூட்டுத்தாபனப் பொறியியலாளர்) அவர்களின் அன்பு மாமனாரும், செல்வி சரோஜினிதேவி (கரணவாய்), கார்த்திகேசு (தலைவர், கரச்சி வடக்கு ப.நோ.கூ.சங்கம்) திருமதி மகேஸ்வரி (ஆசிரியை திருமலை) சரவணமுத்து (நியூஹிமாலயா-குண்டசாலை) திருமதி கனகசபை, பொன்னம்பலம் (கனடா) ஆகியோரின் மைத்துனரும், திருமதி புவனேஸ்வரி, வி.செ. சுவாமிநாதன் (திட்டமிடல் பிரதி செயலாளர் வ.கி.மா) திருமதி உமா ஆகியோரின சகலனும், தேவசேனன் (லண்டன்) தேவகி(ஆசிரியை) அகிலன், மாதினி, சுகன்யா ஆகியோரின்மாமனாரும் சுமங்கலி (லிகிதர்) அபிராமி (மாணவி) விஞ்ஞான பீடம் (யாழ்பல்கலைக்கழகம்) விஸ்வபாரதி ஆகியோரின் அன்புச் சிறிய தந்தையாரும் அபிநயாவின் அன்பு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 10-04-2002 புதன்கிழமை காலை 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைகளுக்காக கண்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தளமியன்
கரணவாய் கிழக்கு
கரவெட்டி

தகவல்
இ. சரோஜினிதேவி
(மைத்துனி)

(4950)

ஆணையாளர் ரி.வி.கிருஷ்ணசாமி, மாவட்ட நீதிபதி ஆர்.ரி. விக்னராஜா, உயர் நீதிமன்ற நீதியரசர் கே. பி. எஸ். வரதராஜா ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொள்கிறார்கள்

(செ- 225)

கலாசாலை அதிபர் ஐ.புவனேந்திரன் ஆசிரியபயிற்சி கலாசாலைகளுக்கு ஆசிரிய மாணவர்களை சேர்த்துக் கொள்வது சம்மந்தமாகதெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

இதுதொடர்பாக அவர் ... றப்படாத ஆசிரியர்களின் விண்ணப்பங்கள் ஆங்கிலம் உட்பட அதிபர், கோப்பாய் ஆசிரியர் கலாசாலை என்ற முகவரிக்கு இம்மாதம்30ம் திகதிக்கு முன் அனுப்ப வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார். (க)

# பாராளுமன்றை கலைக்கும் அதிகாரம் ஜனாதிபதியிடம் பறிக்க முயற்சி

(கொழும்பு)

ஜனாதிபதி குமாரதுங்காவுக்கும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கத்திற்குமிடையே கருத்தொருமிப்புசாத்தியமற்றுப் போகும் சூழ்நிலை உருவாகி வருவதால், ஒரு வருடத்தின்பின் பாராளுமன்றத்தை கலைக்கும் அதிகாரத்தை ஜனாதிபதியிடமிருந்து பறித்தெடுக்கும் சட்ட ஏற்பாடுகள் பற்றி ஐ. தே. மு. அரசாங்கம்தீவிரமாக யோசித்து வருகிறது. இதற்கு பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டுபங்குபெரும்பான்மை உண்டு என்றும் அமைச்சரவை வட்டாரம் தெரிவித்துள்ளது.

பதினைந்துமாதங்களுக்குள் நாடு இரண்டு பொதுத் தேர்தலைச் சந்திப்பதில் பாராளுமன்ற உறுப்பினர்கள் வெறுப்புள்ளவர்களாக உள்ளனர். இதனால் அவர்கள் அரசியற் சட்டத்தில் மாற்றங்கொண்டு வரப்படுவதை விரும்புகின்றனர் என்று அந்த அமைச்சரவை வட்டாரம் தெரிவித்தது.

இதேவேளை பாராளுமன்ற உறுப்பினர்கள் தத்தமது கட்சிகளின் நிர்ப்பந்தங்களுக்கு உட்படாமலும், கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்டு விடுவோமோ என்ற அச்சமின்றியும் சுதந்திரமாக வாக்களிக்கும் உரிமையை பெற்றுத் தரும் சட்டத்திருத்தம்அடுத்த மாதம் சபையில் சமர்ப்பிக்கப்படும் என்று அரசமைப்பு விவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் செய்தியாளர் மாநாட்டில் செவ்வாயன்று தெரிவித்தார்.

ஜனாதிபதியின் அதிகாரங்களை கட்டுப்படுத்தும் அரசமைப்புத் திருத்தங்கள் பற்றி அரசாங்கம் செயற்பட்டுவருவதாக நீதியமைச்சர் லொக்கு பண்டார ஏற்கனவே தெரிவித்திருக்கிறார். ஜனாதிபதியின் அதிகாரங்கள் குறைக்கப்பட்டபின் ஒரு சம்பிரதாயப் பதவியில் அவர் இருக்க அனுமதிக்கப்படவேண்டும்என்பது ஒரு பிரிவினரின் தீர்மானமாக இருக்கிறது.

பாராளுமன்றத்திற்கு மேலாதிக்கத்தைத் தரும் வகையிலான, டொனமூர் அரசியற்திட்டம் சார்ந்ததான திருத்தங்கள் செய்யப்படுமென்றும், 20சர்வகட்சிகுழுக்கள் பாராளுமன்றத்தில் அமைக்கப்படுமென்றும் அமைச்சர் பீரிஸ் அறிவித்துள்ளார். (எ)

# மத்தியில் மூன்றாவதுஅணி உருவாக்குவது அவசியம்

## முன்னாள்பிரதமர் தெரிவிப்பு

(சென்னை)

மத்தியில் வி.ஜே.பி மற்றும் காங்கிரஸிற்கும் மேலாக மூன்றாவது அணி ஒன்று அமைய வேண்டிய அவசியம் வந்து விட்டது என்று முன்னாள் பிரதமர் தேவகவுடா தெரிவித்தார்.

சென்னையில் நேற்று முன்தினம் தனியார் பொறியியல் கல்லூரியின் பட்டமளிப்பு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றியபின், பத்திரிகையாளரிடம் பேசுகையில்; கர்நாடக கனகபுர மக்களவைத் தேர்தலில்இரண்டுஅணிகளையும் சேராத மாற்றுக் கட்சியினர் தான் மக்களால் தேர்ந்து எடுக்கப்பட்டனர்.

மூன்றாவது அணி ஒன்று ஆரம்பிக்க தருணம் வந்து விட்டது என்றும் கூறினார்.

(து)

# மான்குட்டியை நேசிக்கும் கருணையுள்ள சிங்கம்

## கென்யாவில் சம்பவம்

(நைரோபி)

ஒருதாய் வயிற்றில் பிறந்த பிள்ளைகளே தங்களுக்குள் முட்டிமோதும் இக்காலத்தில் மான்குட்டி ஒன்றை பாசத்துடன் வளர்த்து வரும் சிங்கத்தை பார்வையிடுவதற்காக பெருமளவு மக்கள் கென்யா 'சாம்பரு' தேசிய பூங்காவிற்கு படையெடுத்து வருகின்றனர்.

இது குறித்து மேலும் தெரியவருவதாவது;

பிறந்து 5 நாட்களான மான்குட்டி குறிப்பிட்ட சிங்கத்துடன் விளையாடிக் கொண்டு வருகிறது. சிங்கமும் மான்குட்டியை தனது குட்டிபோல் பராயரித்து வருகிறது.

தாய் மானை பார்க்க மட்டும் அனுமதிக்கும் சிங்கம் மான்குட்டியை அழைத்துச் செல்ல அனுமதிக்கவில்லை.

இதேபோல் முன்பும் இரு தடவைகள் இச்சிங்கம் மான் குட்டிகளை வளர்த்துள்ளதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

(க-23)

# பலஸ்தீனத்திலிருந்து இஸ்ரேல் படையினர் உடன் வாபஸ் பெற வேண்டும்

(ஜெருசலேம்)

பலஸ்தீனப் பி'ரதேசத்திலிருந்து இஸ்ரேலியப் படையினர் உடனடியாக வாபஸ் பெற வேண்டும் என அமெரிக்க ஜனாதிபதி ஜேர்ஜ் டபிள்யூ புஷ் இஸ்ரேலியப் பிரதமர் ஏரியல்ஷரோனிடம் தொலைபேசி மூலம் பணிப்பு விடுத்துள்ளார்.

இஸ்ரேல் தனது பாதுகாப்பு நடவடிக்கைகளை விரைவில் முடித்துக் கொண்டு பலஸ்தீனப்பிரதேசங்களிலிருந்து வெளியேறும் என பிரதமர் ஏரியல் ஷரோன் புஷ்ஷிடம் தெரிவித்துள்ளார்.

இதேவேளை இஸ்ரேலுக்கு எதிராக தற்கொலைக் குண்டுத் தாக்குதல்களுக்குப் பொறுப்பானவர்கள் என்று நம்பப்படுபவர்களை தேடிப் பிடிக்கும் நடவடிக்கைகளில் இஸ்ரேல் ஈடுபட்டுவருவதாகவும்,

நகரங்கள் மற்றும்கிராமங்களில்ஒளித்துவைக்கப்பட்டுள்ள ஏராளமான ஆயுதங்களை தேடி அழிக்கும் நடவடிக்கைகளில்ஈடுபட்டுவருவதாலேயே தாமதம் ஏற்படுவதாகவும் ஏரியல் ஷரோன் அமெரிக்க ஜனாதிபதியிடம்தெரிவித்துள்ளார்.

(செ)

**தேசம் மகிழவே வாருங்கள்!**

# ஜம்முவில் 12பேர் பலி

(ஸ்ரீநகர்)

ஜம்முகாஷ்மீரில் பிரிவினைவாதக் கெரில்லாக்கள் எட்டுப் பேர்உட்பட பன்னிரெண்டு பேர் கொல்லப்பட்டுள்ளனர் இவர்களில் ஒருவர்பொலி)சகாரர்ஆவார். (வெஸ்

# பாராட்டு வைபவம்

(காரைநகர்)

காரைநகர் வாரிவளவு நல்லியக்க சபையினரால்க.பொ.த. சாதாரணம் 2001 இல் சிறந்த பெறு பேறுகளைப் பெற்ற காரைநகர் பாடசாலை மாணவர்களை பாராட்டி, பரிசளிக்கும் வைபவம் இரு பிரிவுகளாக நடைபெறவுள்ளன.

புதன்கிழமை மு.ப. 11.00 மணிக்கு யா. கலாநிதி ஆ. தியாகராஜா மத்திய மகா வித்தியாலயத்தில் கல்லூரி அதிபர் பண்டிதர் மு.சு வேலாயுதம்பிள்ளை தலைமையில் இடம்பெற உள்ளது.

பி.ப.1.00 மணியளவில் யா. யாழ்ரன் கல்லூரியில், கல்லூரி அதிபர் ந.பரமசிவம் தலைமையிலும் நடைபெறவுள்ளது. இந்த இரு நிகழ்விற்கும் தீவக கல்விப்பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் பிரதம விருந்தினராக கலந்து கொள்ள வுள்ளார்.

(க246)

# இராசி பலன்

8.4.2002
(பங்குனி 25, திங்கள்)
ஏகாதசி மா.5.52வரை
அவிட்டம்-மா5.52வரை
ராகுகாலம்-7.37-9.07
நல்லநேரம்-12.07-1.37
நான்காம் பங்குனித்திங்கள்
ஏகாதசிவிரதம்

**மேடம்**

கீர்த்தி, தனவரவு, எடுத்த கருமம் கைகூடும், குடும்ப மகிழ்ச்சி

**இடபம்**

அதிகாரம், செய்தொழில் மேன்மை, நல்லசெய்தி, முயற்சி கைகூடும்

**மிதுனம்**

உடல்வியாதி, புதியதிருப்பம், காரியதாமதம், தொழில் நன்மை

**கடகம்**

நண்பர்கள் மனஸ்தாபம், திடீர் நன்மை, முயற்சிதாமதம் தொழில்கஷ்டம்

**சிங்கம்**

குடும்பமகிழ்ச்சி, காரியஅனுகூலம், பிரயாணம், பொருள் சேர்க்கை

மரபணு பரிசோதனை முயற்சியில்

# இத்தாலிய நிபுணர் மற்றுமொரு சாதனை

(உரோம்)

இத்தாலிய சர்ச்சைக்குரிய மகப் பேற்று மருத்துவ நிபுணர் செவரியோனோ அன்ரினோரி மரபணு விருத்தி சிகிச்சை மூலம் பெறப்பட்ட முட்டையை பயன்படுத்தி ஒரு பெண்ணை கர்ப்பம் தரிக்க செய்துள்ளார்.

மற்றுமொரு கருவள சிகிச்சை நிபுணருடன் இணைந்து தாம் மேற்கொள்ளும் மனிதமரபணு விருத்தி சிகிச்சைத் திட்டத்தில் கலத்து கொள்ளும் பெண் ஒருவரே இப்போது கர்ப்பம் தரித்துள்ளார் என அன்ரினோரி தெரிவித்ததாக நேற்று முன் தினம் இணைய தளம் செய்தி வெளியிட்டுள்ளது.

இத்தாலியில் சட்ட விரோதம் என கருதப்படும் இச்சிகிச்சை மூலம் மனிதக் குழந்தையை உற்பத்தி செய்யும் முயற்சியை தான்தொடர்ந்து ஆய்வு செய்யப் போவதாக அன்ரினோரி கடந்த வருடம் அறிவித்திருந்தார்.

1994 ஆம் ஆண்டு உரோமபுரியில் அன்ரினோரியின் விசேட சிகிச்சை கூடத்தில் மேற்கொள்ளப்பட்ட கருவள சிகிச்சை மூலம் 63 வயதான இத்தாலிய பெண் ஒருவர் கர்ப்பவதியானதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

(க-2-3-8)

# நாட்டிற்காக செயற்பட அரபாத் தவறிவிட்டார்

## புஷ் குற்றச்சாட்டு

(வாஷிங்டன்)

பலஸ்தீன தலைவர் யஸீர் அரபாத் தனது நாட்டுமக்களிற்காக உரிய முறையில் செயற்படதவறிவிட்டார் என அமெரிக்கஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் குற்றம் சாட்டியுள்ளார் இஸ்ரேலியர்களுக்கும் பலஸ்தீனர்களுக்கும் இடையில் யுத்தநிறுத்த உடன்பாடு ஒன்று ஏற்பாடாகி இருந்த போதும் அதனை அவர் கடைப்பிடிக்கதவறிவிட்டார் என்பதனால் அரபாத் மீது தான் கொண்டிருந்த நம்பிக்கை வீணடிக்கப்பட்டு விட்டது என்றும் தெரிவித்துள்ளார். பிரிட்டிஷ் தொலைக் காட்சியொன்றுக்கு அளித்த பேட்டியிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

மத்திய கிழக்கு நாடுகளில் நடைபெற்றுவரும்இஸ்ரேலிய பலஸ்தீன பிரச்சினைகளை தீர்வுகாணும்முகமாக அரபாத்துக்கு பல சந்தர்ப்பங்கள் வழங்கப்பட்டிருந்த போதும் அவர் அதற்குரிய வழிகளை கடைப்பிடிக்கத் தவறிவிட்டார் எனவும் தெரிவித்துள்ளார்.

(உ-8)

# மாவோ தீவிரவாதிகள் 14 பேர் சுட்டுக் கொலை

(காத்மண்டு)

நேபாளத்தில் மாவோ தீவிரவாதிகள் பதினான்கு பேரை பாதுகாப்பு படையினர் சுட்டுக் கொன்றுள்ளனர்.

மன்னர் ஆட்சியைச் கவிழ்த்து கொம்யூனிச ஆட்சியை ஏற்படுத்துவதற்கு மாவோ தீவிரவாதிகள் முயற்சி செய்து வருகின்றனர்.

வறுமை நாடான நேபாளத்தின் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு நாடாளுமன்ற ஜனநாயகம் தவறிவிட்டது என தீவிரவாதிகள் குற்றஞ் சாட்டியுள்ளனர். (செ)

# ராஜ மாதா மகாராணியின் இறுதிச் சடங்குகள் இன்று

(லண்டன்)

பிரித்தானிய எலிசபெத் மகாராணியின் தாயாரின் இறுதிச் சடங்குகள் இன்று நடைபெறவுள்ளன.

கடந்த 30 ஆம் திகதி காலமான மகாராணியின் பூதவுடல் வெஸ்ற் மின்ஸ்ரர் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்தது.

இவ்வஞ்சலி நிகழ்வில் பல்லாயிரக் கணக்கான பொதுமக்கள் கலந்து கொண்டு தமது இறுதி அஞ்சலிகளைச் செலுத்தினர்.

## வாருங்கள்!

தலைவனின் ஆணையை ஏற்றிடும் தமிழ்
போராளிகளே வருக!
தமிழரின் நலனைப் பேணிடும் தமிழ்
போராளிகளே வருக
உலகமே எண்ணி வியந்திடும் தமிழ்
போராளிகளே வருக
உரிமை காண உழைத்த தமிழ்
போராளிகளே வருக
திலகம் போன்ற யாழ் மண்ணுக்கு தமிழ்
போராளிகளே வருக
தீர்வினைத் தமிழர் நிலத்தில் சேர்க்க தமிழ்
போராளிகளே வருக
கலகம் நிறுத்தி கை கோர்த்த தமிழ்
போராளிகளே வருக
காலம் தமிழர் பக்கம் திரும்ப உழைத்த
தமிழ் போராளிகளே வருக
விலகிடத் துயரம் விடிவுகள் காட்ட தமிழ்
போராளிகளே வருக
வெற்றிகள் ஆயிரமாயிரம் மண்ணில் குவிக்க
தமிழ் போராளிகளே வருக
நிலவிடும் சமாதான முயற்சி நிலைத்திட தமிழ்
போராளிகளே வருக
நிரந்தர உரிமையை தமிழருக்கு பெற்றிட
தமிழ் போராளிகளே வருக
ஏற்றிட தமிழ்க் கொடியினை எம்நிலத்தில் தமிழ்
போராளிகளே வருக
இருபது வருட போரினை நிறுத்திய தமிழ்
போராளிகளே வருக
மாற்றம் தமிழருக்கு சேர்த்திட தமிழ்
போராளிகளே வருக
மாவீரர் நினைவினைச் சுமந்திடும் தமிழ்
போராளிகளே வருக!

- தமிழிளம்பரிதி

குடும்பமகிழ்ச்சி, காரியஅனுகூலம், பிரயாணம், பொருள் சேர்க்கை

**கன்னி**

பகைவர்நேசம், செய்தொழில்விருத்தி, காரியநன்மை உடல்நலம்

**துலாம்**

பெரியோர்ஆதரவு ,குடும்பக்கவலை, முயற்சிதாமதம், தொழில்நன்மை

**விருச்சிகம்**

மனக்கிலேசம், காரியதாமதம், ரோகபயம், வேலைக்கஷ்டம்

**தனுசு**

காரியஅனுகூலம், எதிர்பாராதநன்மை, பொருள்சேர்க்கை, சகோதரர்உதவி

**மகரம்**

வாக்குகலகம், முயற்சிபலிதம், மாதர்நட்பு, குடும்ப நன்மை,

**கும்பம்**

ஜனவசியம், காரியஅனுகூலம் சயனசுகம், போசனசுகம்

**மீனம்**

பிரயாணக்கஷ்டம், சுபசெலவு, காரியதாமதம், கற்பனைமிகுதி

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)

**வளவன்**

நடைபெறவுள்ளன.

கடந்த 30 ஆம் திகதி காலமான மகாராணியின் பூதவுடல் வெஸ்ற் மின்ஸ்ரர் சாலையில் பொதுமக்களின் ... பொதுமக்கள் கலந்து கொண்டு தமது இறுதி அஞ்சலிகளைச் செலுத்தினர்.

(செ)

## முதலையுடன் போராடி மூதாட்டியை காத்த நாய்

(மியாமி)

முதலையின் பிடியிலிருந்து தனது எஜமானியை நாய் ஒன்று காப்பாற்றிய சம்பவம் மியாமியில் இடம் பெற்றுள்ளது.

இச்சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது;

85 வயதான மூதாட்டி புளூ என்ற தனது நாயுடன் மாலை நேரம் உலாவுவதற்காக வீட்டிற்குப் பின்புறமாக உள்ள கால்வாய் ஊடாக சென்ற போது, மூதாட்டி வழுக்கி வீழ்ந்து காயம் ஏற்பட்டதில் அவலக்குரல் எழுப்பியுள்ளார்.

இச்சத்தத்தைக் கேட்டு கால்வாயினுள்ளிருந்த முதலை ஒன்று மூதாட்டியை நோக்கி வந்தது.

அதனைக் கண்ணுற்ற மேற்படி நாய், முதலை மூதாட்டியை நெருங்காதவாறு துணிகரமாகப் போராடியது.

இதனால் மூதாட்டி காப்பாற்றப்பட்டார். நாய்பலத்த காயங்களுடன் உயிர் தப்பியது.

(செ)

## நெடுந்தீவிலும் பதாகைகள்

(நெடுந்தீவு)

தமிழீழ விடுதலைப் புலிகளின் யாழ். விஜயத்தை ஒட்டி நெடுந்தீவின் மேற்கு, மத்தி ஆகிய பகுதிகளில் புலிகளை வரவேற்கும் பதாகைகளும், சுவரொட்டிகளும் காணக் கூடியதாக உள்ளது.

இவற்றில் ''தமிழினத்தின் கலங்கரை விளக்குகளை வரவேற்போம்'' மண்ணின் மைந்தர்களை வரவேற்போம்'' தமிழினத்தின்காவலர்களை வரவேற்போம்'' போன்ற வாசகங்கள்அடக்கப்பட்டு இருப்பதைகாணக்கூடியதாக உள்ளது.

(க-2-250)

# யாழ்ப்பாணம் வருகை த
# போராளிகளை மனமுவந்


**சாரங்கா**
**நகை மாடம்**
177/4, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
T.P/Fax:- 021-2480

**அம்பாள் பல்பொருள்**
**வாணிபம்**
176, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.
T.P:- 021-2531

**மகாநதி**
**புடவையகம்**
16, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.

**ராஜா கிறீம்**







**ராஜா கிறீம் ஹவுஸ்**

36, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.






**அர்ச்சனா ஜுவலர்ஸ்**

118, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

**சுப்பஸோ கலர் லாப்**
**சுப்பஸோ வீடியோ**

198/5, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
T.P- 021-2435

149, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
T.P- 021-2082

**புஸ்பா ஸ்ரே**

192, கச்சேரி நல்லூர்
யாழ்ப்பாணம்.
T.P- 3408

**துர்க்கா நகைப் பூங்கா**

71, கன்னாதிட்டி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

T.P:- 021-2228

**மகாநதி ஜுவல்லறி**

72A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

**எலைற் கல்வி நிறுவனம்**

இல:- 147, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்

**கு**

இல-

கிளை:-
பிள்ளைய

# ...க தரும் விடுதலைப் புலிப்
# ...வந்து வரவேற்கின்றோம்





**சிறி நதியா நகை மாளிகை**
**சிறி ரூபா நகை மாளிகை**
இல-01 கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

**மதனா**
**ஜுவல்லறி**
177/3, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

**ஸ்ரீ வாணி**
**நகை மாடம்**
173, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

**கிருஷிகா ஆடை**





கிருஷிகா ஆடை அகம்

69A நவீன சந்தை (உட்புறம்),
யாழ்ப்பாணம்.

...ா ஸ்ரேரோர்ஸ்

...கச்சேரி நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P- 3408

ஒலிம்பிக் நகைத் தொழிலகம்

*190/4, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.*

நியூ பிரியங்கா ஜுவலர்ஸ்

177, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

...வி

...வீதி,

குமரன் தொலைத் தொடர்பகம்

இல- 27 சப்பல் வீதி, யாழ்ப்பாணம்.
T.P-No:- 021-2765
கிளை:-
பிள்ளையார் கோயிலடி களபூமி காரைநகர்.
T.P-No:- 070-212978

நிருத்திகா ஜுவல்லர்ஸ்

177, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
T.P:- 021-2694

ஜெய கிருஷ்ணா ஜுவல்லர்ஸ்

158, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.




# மடவளைபடுகொலைகளும் இலஞ்சம் கொடுக்கும் முயற்சிகளும்

மார்ச் 31 ஆம் திகதி 'சண்டே லீடரில்' வெளியான கட்டுரையின் தமிழாக்கம்

மாலிக்கின் நிறையில் இப்போது 15 கிலோ வரை குறைந்து விட்டது. மடவளை படுகொலைகள் சம்பவத்தில் பல தடவைகள் அவர் மீது துப்பாக்கியால் சுடப்பட்ட காலத்தில் 53 கிலோ நிறையில் இருந்த மாலிக் இப்போது தோல் சுருங்கி தனது 26 வயது வாலிபப் பருவத்தை மீறிய வயோதிப தோற்றத்தில் காணப்படுகிறார்.

**உறுதியான தீர்மானம்**

துப்பாக்கிச் சூட்டினால் ஏற்பட்ட நான்கு பயங்கரக் காயங்களுடன் ஊன்றுகோலின் உதவியுடன் மெதுவாக இழுத்தபடி நடக்கும் மாலிக், உறுதியான ஒரு தீர்மானத்தோடு இருக்கிறார்.

'உடம்பிலுள்ள வெளிக் காயங்கள் உண்மையில் எனக்கு ஒரு பொருட்டல்ல, பயங்கரமான இந்தக் குற்றங்களைச் செய்தவர்களுக்கு சரியான தீர்ப்பு வழங்கப்படுவதற்கு நான் இன்னொரு முறை மரணத்தை எதிர்நோக்கவும் தயாராக இருக்கிறேன்' என்று வீரத்தோடு கூறுகிறார்.

**சரியான தீர்ப்பு**

கடந்த டிசம்பர் 5 ஆம் திகதி நடைபெற்ற பொதுத் தேர்தல்மாலிக்கிற்கு ஒருபயங்கரக் கனவாக நிழலாடுகின்றது.

இந்த நாட்டில் என்றுமே நடக்காத படுமோசமான அந்த தேர்தல் வன்செயல் சம்பவம் தொடர்பாக முன்னாள்பிரதிப்பாதுகாப்பு அமைச்சர்அனுருத்தரத்வத்தை அவரது இரு புதல்வர்களானலோகான், சானுக்க ஆகியோர்உட்பட இராணுவத்தைச் சேர்ந்த வேறு 30 சந்தேகப் பேர்வழிகளுக்கு எதிரான வழக்கின் அத்தாட்சிக்குரிய சாட்சியங்கள் மாலிக்கிடம் இருக்கின்றன.

தம்மீது தாக்குதலை மேற்கொண்டவர்களுக்கு சரியான மாக நடமாடுவதற்கு இலஞ்சமாகப் பணத்தையோ வேறு எந்தவித சலுகைகளையோ அவர்களிடமிருந்து நான் ஒருபோதும் ஏற்றுக் கொள்ள மாட்டேன் என்று தெரிவித்தார்.

எனினும் ரத்வத்தையால் உத்தியோகத்தில் அமர்த்தப்பட்டவர்களும், லாகிர், ஷாஜகான் சீசர் முதலிய அவரது ஆதரவாளர்களும் இந்த வழக்கின் சாட்சிகளை அணுகி மடவளை படுகொலைகள் இடம் பெற்றபோது அங்கு நின்ற லோகானையோ அல்லது சானுக்கவையோ அடையாளம் காட்ட வேண்டாம். அதற்கு மாற்றாக பணம் வழங்குவோம் என்று கூறினார்கள் என்பதை மாலிக் ஒப்புக் கொண்டார்.

லாகீர் என்பவர் மடவளையில் உள்ள மாலிக்கின் தந்தையிடம் சென்று அவருக்கு பணம் வழங்குவதாக ரத்வத்தையின் சார்பில் வாக்களித்தார்.

'பணத்தை வேறு யாரிடமாவது கொண்டு போய்க் கொடு மகனுக்கு இதில் ஆசை இல்லை' என்று அவர் மறுத்து பதிலளித்து விட்டார்.

**சாட்சியின் விலை ரூபா 25 இலட்சம்**

இதனால் சாட்சிகள் லஞ்சம் வாங்கி விட்டார்கள் என்ற வதந்தி அந்நாட்களில் பரவியது. சானுக்க, லோகான் இருவரும் விடுதலையாகிச் செல்வதற்கு சாட்சிகள் ஒவ்வொருவரதும் விலை 25 இலட்சம் ரூபா!

"வானுக்குள் பெருக்கெடுத்த இரத்தம் ஓர் அங்குலத்தடிப்பில் நின்றது எனது படுகாயங்களுக்கு உதவிதேடி வானுக்கு வெளியே செல்வதற்காக மெதுவாகத் தவழ முற்பட்டபோது இரத்தம் 'ஜெலி' யில் நடப்பதுபோல் சறுக்கியது.'

மாலிக பொலிஸாருக்கு அளித்த வாக்கு மூலத்தில் கொலை நடந்த இடத்தில் தான் லோகானையும் சானுக்கவையும் கண்டதாக அவர்களின் பெயர்களைக் குறிப்பிட்டுச் சொன்னபடியால் அவர் நீதிமன்றிற்கு வந்திருந்தாலும் அடையாளம் காட்டுவதற்காக அழைக்கப்படவில்லை.

அந்த துரதிர்ஷ்டமான தினத்தில் கொலைகள் நடந்த இடத்தில் லோகானும்சானுக்கவும் நின்றதாக எந்தவித தடுமாற்றமுமின்றி மாலிக் உறுதியாகக் கூறுகிறார்.

**சரமாரியான துப்பாக்கிச் சூடு**

தான் இறந்தது போல் வானுக்குள் கிடந்தபோது சானுக்க சாரதி ஆசனத்தின் பக்கம் சென்று திறந்திருந்த கண்ணாடி ஊடாக முன் ஆசனத்தில் இருந்த முஸ்லிம் இளைஞன் தன்னைச் சுட வேண்டாம் என்று கெஞ்சக் கெஞ்ச மிகவும் கிட்ட நின்று சரமாரியாகச் சுட்டதைதான் கண்டதாக மாலிக் தெளிவாகக் கூறுகிறார்.

லோகானும் கையிலே துப்பாக்கி வைத்திருந்தார் என்றும் அவரும் வான்பக்கம் சென்று காயப்பட்டு இரத்தம் பெருக்கெடுத்தோட உயிர் ஊசலாடி இறந்து கொண்டி

செய்தவர்.

கடந்த டிசம்பரில் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர்ரவூப்ஹக்கீம் ஐ. தே. கட்சிக்கு ஆதரவு வழங்குவது என்று தீர்மானித்ததை அடுத்து மாலிக் ஹக்கீமின் விசுவாசியாகமாறினார்.

தனது விசுவாசத்திற்காக அதிக விலை கொடுத்த மாலிக், எப்படியாயினும் தான் இழந்த 10 நண்பர்களின் சார்பில் நீதி வழங்கப்படுகின்றதா என்பதைக் கவனிக்கப் போவதாகத் தீர்மானித்துள்ளார்.

ரத்வத்தையின் புதல்வர்களான இரு சகோதரர்களும் மீண்டும் மீண்டும் துப்பாக்கி ரவைகளைத் தீர்த்து தாங்கள் பிரயாணம் செய்த வானுக்குள் பெரிய இரத்தக் குளியலை ஏற்படுத்தினார்கள். என்று மாலிக் மயிர்ச் கூச்செறிய அந்தச் சம்பவம் பற்றி விவரிக்கிறார்.

**இரத்த வெள்ளம்**

வானுக்குள் பெருக்கெடுத்த இரத்தம் ஓர் அங்குலத் தடிப்பில் நின்றது. எனது படுகாயங்களுக்கு உதவி தேடி வானுக்கு வெளியே செல்வதற்காக மெதுவாகத் தவழ முற்பட்ட போது எனதும், நண்பர்களதும் இரத்தம் 'ஜெலி' மீது நடப்பது போல் சறுக்கியது என்று அந்தப்பயங்கர அனுபவம் குறித்து மாலிக் மனம் உருகியவாறு கூறுகிறார்.

அந்நிலையில் காயங்களால் ஏற்பட்ட வலி தாங்க முடியாது பற்களைக் கடித்துக் கொண்டு கிடந்த போது லோகான் அங்குவந்து துப்பாக்கியை எனது நாடிக்குக்

லோகான் நம்பி விட்டார்.

நண்பனின் இரத்தம் என்னைக் காப்பாற்றிவிட்டது என்று மாலிக் கண்கள் பளபளக்க உணர்ச்சி வசப்படுறார்.

**லோகானின் மனைவி அட்டகாசம்**

கொலை செய்யப்பட்டவர்களின் குடும்பங்களை ஆற்ற முடியாத கண்ணீரில் பரிதவிக்கச் செய்து இந்த நாட்டிற்கு அவமானத்தை ஏற்படுத்திய குற்றத்தின் சந்தேகப் பேர்வழிகள் அரச செலவில் மருத்துவ மனையில் இருந்து கொண்டு விசேடமாகக் கவனிக்கப்படுகிறார்கள்!

அவர்களின் அக்கிரமங்களுக்கும், ஆணவத்திற்கும் எல்லையே இல்லை. கடந்த வாரம் லோகானின் மனைவி மாண்டி போகம்பரை சிறைச்சாலையின் உள்ளே அவர் மோட்டார் வண்டியைச் செலுத்திக் கொண்டு போவதைத் தடுத்தபோது, பெரிய அட்டகாசம் செய்பவராக சிறைச்சாலையின் வாசலில் காணப்பட்டார்.

லோகானின் மனைவியான என்னோடு இப்படியா நடந்து

தமிழில்:
**கபிலர்**
★
ஆங்கிலத்தில்
பிறெற்றிக்கா ஜான்ஸ்

கொள்வது என்று அப்போது அவர் ஆத்திரத்தோடு சத்த

றன.

தம்மீது தாக்குதலை மேற்கொண்டவர்களுக்கு சரியான தீர்ப்பு வழங்கப்படும் என்று உறுதியான தீர்மானத்துடன் மாலிக் இருக்கிறார்.

லஞ்சப் பணம்

சாட்சிகள் லஞ்சம் வாங்கினார்கள் என்று அடிபட்ட பேச்சுக்கள் பற்றி மாலிக் குறிப்பிடும் போது, இந்தக் குற்றத்திலிருந்து ரத்வத்தை குடும்பத்தினர் தப்பி சுதந்திர

இடத்தில் லோகானையும் சானுக்கவையும் கண்டதாக முன்பு கூறிய மேற்படி மூன்று சாட்சிகளும் இந்த வருடம் மார்ச் மாதம் 4ஆம் திகதி அடையாள அணி வகுப்பின் போது அடையாளம் காட்டுவதற்காக தெல்தெனிய நீதிவான்நீதி மன்றிற்கு கொண்டுவரப்பட்டார்கள். அவர்கள் அடையாள அணி வகுப்பில் வேறு ஆட்களையே பிழையாக அடையாளம் காட்டினார்கள்.

றும் அவரும் வான்பக்கம் சென்று காயப்பட்டு இரத்தம் பெருக்கெடுத்தோட உயிர் ஊசலாடி இறந்து கொண்டிருந்த இளைஞர்கள் மீது கண்டபடி சுட்டுத்தள்ளினார் என்றும் மாலிக் தெரிவிக்கிறார்.

ஹக்கீமின் விசுவாசி

லோகானும், சானுக்கவும் மாலிக்கிற்கு அன்னியர்கள் அல்லர். 2000 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் மாலிக் ரத்வத்தைக்காக வேலை

கொண்டு கிடந்த போது லோகான் அங்குவந்து துப்பாக்கியை எனது நாடிக்குக் கீழே கொடுத்து நான் இறந்து விட்டேனா என்று பார்ப்பதற்காக அப்படியே எனது தலையை மேலும் கீழுமாக அசைத்தார்.

நண்பனொருவனது இரத்தம் எனது முகத்தில் பாய்ந்து முகத்தை மூடியிருந்ததால் நான் இறந்துவிட்டதாக

கொள்வது என்று அப்போது அவர் ஆத்திரத்தோடு சத்தமிட்டார்.

கடந்தவாரம் லோகானும் சானுக்கவும் கண்டி மருத்துவமனையிலிருந்து போகம்பரை சிறைச்சாலைக்கு கொண்டு செல்லப்பட்டார்கள். ■

---

# இலங்கை-பங்களாதேஷ் வர்த்தக உறவுகளை மேம்படுத்த முயற்சி

(கொழும்பு)

இலங்கைக்கும் பங்களாதேஷுக்கும் இடையிலான வர்த்தக உறவுகளை மேம்படுத்தும் நடவடிக்கைகளை வர்த்தக நுகர்வோர் விவகார அமைச்சு மேற்கொண்டு வருகிறது.

இது தொடர்பாக அமைச்சர் ரவி கருணாநாயக்காவும் இலங்கைக்கான பங்களாதேஷ் உயர் ஸ்தானிகர் அஸ்ரொப் உட்தெளளத்தும் பேச்சு வார்த்தை நடத்தியுள்ளனர்.

இப்பேச்சு வார்த்தையின் பயனாக இலங்கை வர்த்தக தூதுக்குழு ஒன்று விரைவில் பங்களாதேஷுக்கும், பங்களாதேஷ் வர்த்தகத் தூதுக்குழுவொன்று இலங்கைக்கும் விஜயங்களை மேற்கொள்ளவுள்ளதாக அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

(க-03)

## புனராவர்த்தன கும்பாபிஷேகம்

அளவெட்டி பெருமாக் கடவைப் பிள்ளையார் ஆலயம் புனராவர்த்தன பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகம் இன்று திங்கட் கிழமை மு.ப. 9.15 மணிக்கு நடைபெறவுள்ளது.

(செ)

# சமாதான பேரணியில் அமைச்சர்கள்

(யாழ்ப்பாணம்)

ஊரெழு கலைவாணி சனசமூக நிலையத்தினரின் ஏற்பாட்டில் இடம்பெறும் சமாதான சைக்கிள் பேரணி நாளை காலை 6.00மணிக்கு ஆரம்பமாக உள்ளது.

ஊரெழு ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலய முன்றலில்ஆரம்பமாகும் இந் நிகழ்வை அமைச்சர்களான தி. மகேஸ்வரன், ராஜித் சேனாரத்ன ஆகியோர் ஆரம்பித்து வைப்பர்.

காலிமுகத்திடலில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் சமாதானச் சின்னம் கையளிப்புடன் இப்பேரணி நிறைவுறும்.

(க)

# நெடுந்தீவில் 50 வீடுகள் திட்டம் ஆரம்பம்

(நெடுந்தீவு)

நெடுந்தீவு பிரதேச செயலர் பிரிவின் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் 50 வீடுகள் அமைக்கும் திட்டம் ஆரம்பமாகியுள்ளது.

இதற்கான முன்னேற்பாட்டு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அதிகாரிகள் மட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம், கிராம அலுவலர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர் ஆகியோரின் தரவுகளின் அடிப்படையிலும் மக்களின் விண்ணப்பங்களின் அடிப்படையிலும் வீடுகள் வழங்கப்படவுள்ள 75 பெயர்கள் அடங்கிய பட்டியல் ஒன்றும் வெளியிடப்பட்டுள்ளது.

06ம், 10ம், 11ம், 12ம், 13ம், 14ம் வட்டாரங்களைச் சேர்ந்த 75 பேரே இப்பட்டியலில் அடங்குவர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

(க-250)

## இயங்குகின்றன

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி ப.நோ.கூ. சங்க தலைமைக் காரியாலயமும், கிராமிய வங்கியும் கடந்த 1 ஆம் திகதி தொடக்கம் பெரிய அரசடி தாமோதரம் பிள்ளை வீதியில் தனியார்கட்டடம்ஒன்றில்இயங்கி வருவதாக சாவகச்சேரி ப.நோ.கூ.சங்க வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

(க)

## இன்று ஒரு தகவல்

# புகழும் புழுகும்

மானிடன் ஒவ்வொருவருக்கும் ஒழுக்கம் இன்றியமையாதது. மிகக் கவனமாகப் பேண வேண்டிய ஒன்று. இதனை இளமையிற் கல்வி போன்று இளமையிலேயே பேணவும் தெரிந்துகொள்ள வேண்டும். மிகக்கவனமான ஒழுக்கத்தை ஒருமுறையேனும் இழந்துவிடுவோமாயின் அதன் பழியினின்றும் என்றுமே மீள முடியாது. சமுதாயம் மிக எச்சரிக்கையோடு விமர்சிக்கும்.

ஊரில் இருவர் நண்பர்கள். அவர்கள் நண்பர்களானதே வினோதமானது. சிறு பராயந்தொட்டே பெற்றோரை பேண மறந்தனர். எவையெல்லாம் தீய பழக்கங்களோ அவையெல்லாவற்றையும் தம் வாழ்க்கை முறையாகக் கைக்கொள்ளத் தலைப்பட்டனர். ஆசிரியர்களது ஆலோசனைகளை அவமதித்தனர். இதனால் பெற்றோரால் உறவினரால் சமூகத்தினரால் புறந்தள்ளப்பட்டனர். ஊரே அவமதித்ததால் இவர்கள் இருவரும் இணைபிரியாத நண்பர்களானார்கள்.

இவர்களது தற்போதைய இணைப்பு தற்செயலானதால் வெளியார் பார்வைக்கு நண்பர்கள் போல்காட்சிகொடுத்தது. இருந்தும் இவர்களுகுள் ஏற்றத்தாழ்வு அவ்வப்போது முளைவிடும். அவர்களது கடின உழைப்பிலல்ல. குதூகலமாகப் பேசிக்கொள்ளும்போது மட்டுமே.

தங்கள் தங்கள் புகழை பறைசாற்றுமாப் போல் புழுகுவர். புழுகத்தில் பிறப்பது தான் புகழோ என்பது இவர்களிடமிருந்து நாம் கற்றுக்கொண்ட சொல் என நம்ப வேண்டியுள்ளது.

இருவரும்ஒருநாள் உயர்ந்த மலைச்சாரலை நாடி நடக்கலாயினர். உரையாடிக்கொண்டு நடந்தனர். மாலை வேளை, மென்மையான காற்று அவர்கள் உடலை தடவிச் சென்றிருக்க வேண்டும். அவர்களது பிறவிக்குணம் முளைகட்டத் தொடங்கியது. முதலாமவர் எதற்கும் முந்திக் கொள்பவர். ...மச்சான் இந்த மலையைப் பார். எவ்வளவு பசுமையாக இருக்கிறது. இதன் உச்சிப்பரப்பில் பசுமை... வெண்மையாகப் படர்ந்திருக்கிறது. இதனுள் தலையை நிமிர்த்துவதுபோல் மலையின் உச்சி தெரிகின்றதே... அதைக் கண்டாயா? என்றார்.

...இரண்டாமவர் சிறிதும் எதிர்பாராத வேளையில்

அதோ நன்கு தெரிகிறது. அந்த உச்சியை என் கண்கள் எட்டியே பிடித்துவிட்டது... என்றார்.

முதலாமவரின் முகத்தைப் பார்க்கிறார். பனியில் கருகிய மலர் ஒன்று அவர் ஞாபகத்துக்கு வந்தது. மடக்கிவிட்ட புழுகத்தில் தனது கேள்வியைத் தொடுத்தார். அந்த சிகரத்தின் உச்சியில் எறும்பு ஒன்று ஊருகின்றதே அதைக் கண்டாயா?

மலை உச்சி தெரிகிறதாம், அதில் எறும்பு ஊர்வதுவும் தெரிகிறதாம்,

புழுகர் எதைத் தான் ஒப்புக்கொள்ளமாட்டார். விட்டேனா பார்... முதலாமவர் தன்னை சிறிது சுதாகரித்துக் கொண்டார்.

எறும்பைக் கண்டேன் அது கறுப்பு. ஊருகிறது. ஆனால் அதற்கு ஒரு குறைபாடு உண்டு. தன் கால்களில் ஒன்றை இழந்துவிட்டது தெரிகிறது. அதன் அசைவில் இயலாமை தெரிகிறது... பாவம் யார் கல்லால் அடித்தார்களோ...

உச்சியிலே எறும்பாவது தெரிவதாவது. போதாதற்கு அது ஒரு காலையும் இழந்து தவிப்பது இவர் கண்களுக்கு தெரிந்துவிட்டது.

இரண்டாமவர் பெரிதும் தம் மனதிலேயே தனது இயலாமையை ஒப்புக்கொண்டுவிட்டார். அதனை வெளிக்காட்ட விருப்பமில்லை. தன் மனவேதனையை எப்படி தாங்கிக் கொள்வது என்பது தான் அவருக்கு சங்கடமாகியது.

இப்போது இருவரும் வந்த வழியே திரும்புகிறார்கள். வானம் இருண்டு கறுத்துவிட்டது. இப்போது நிலவு ஒளி கூட கிடையாதே என்பது அவர்கள் மனதையும் இருள் சூழ வைத்தது. ஒருவரை ஒருவர் இறுக அணைத்தபடி அடிமேல் அடி வைத்து அசைகிறார்கள்.

தாம் எங்கோ ஒரு குழியில் தடுக்கிவிட்டோம் என்பது தான் அவர்களின் இறுதி நினைவில் இருந்திருக்கும்... அவர்களில் எவரும் இப்போது உயிரோடு இல்லை.

பெரியோர் சொற்கேட்டு நடந்து நல்லவற்றை நாடிப் பயின்று சமுதாயத்துக்கு மிகப் பொருத்தப்பாடு உடையவர்களாக வாழ நாம் எல்லோரும் கற்றுக்கொள்ள வேண்டும். அல்லாதவிடத்து படுகுழிகள் வாழ்க்கைப் பாதையின் ஒவ்வொரு பாதச்சுவடுகளுக்கிடையிலும் வெட்டப்பட்டே இருக்கும். மறந்துவிட வேண்

# தென்மராட்சி யுத்த அழிவுகளைக்காட்டி நிதிசேகரிப்பில் அரசு அதீதஅக்கறை

# அபிவிருத்தி முயற்சி இல்லையாம்

## பேராசிரியர் தெரிவிப்பு

(தென்மராட்சி)

தென்மராட்சியில் இடம் பெற்ற யுத்தத்தின் போது, சேதமடைந்தகட்டடங்களின் அழிவுகள், சிதைவுகள், மற்றும் சேதங்களைப் பயன்படுத்தி அரசாங்கம் நிதிசேகரிப்பதிலே அக்கறை கொண்டுள்ளதேயொழிய எத்தகைய புனரமைப்புத் திட்டங்களையும் அமுல் செய்வதில்ஆர்வம் காட்டவில்லை.

இவ்வாறு தென்மராட்சி மக்கள் நலன் சேவைச் சங்கத்தின் தலைவரான பேராசிரியர் க. கந்தசாமி கடந்த வெள்ளிக்கிழமை சாவகச்சேரியில் நடைபெற்றபிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் தெரிவித்தார். அவர் அங்குதொடர்ந்துகுறிப்பிடுகையில்இலங்கை அரசாங்கத்துக்கும்தமிழீழவிடுதலைப் புலிகளுக்குமிடையில் செய்துகொள்ளப்பட்டபுரிந்துணர்வு ஒப்பந்தத்தினைத் தொடர்ந்தும் தென்மராட்சி பிரதேசத்தில் பல இடங்களிலும், முகாம்கள் மற்றும் சோதனைச்சாவடிகளில் இருந்து இராணுவம் இன்னமும் வெளியேறவில்லை.

இதனால் மக்கள் பல்வேறு விதமான கஷ்டங்களை அனுபவித்து வருகின்றனர். இம் மக்களின்துன்பங்களைக் களைய நாம்பல முயற்சிகள் எடுத்திருந்தும் எவ்விதபலனும் கிடைக்கவில்லை. இருந்தும் நாம் எம்மாலானபணிகளை ஆற்றி வருகின்றோம் எனக் கூறினார். (க-77)

## யுத்தத்தை முடிக்க மதிப்பீடு

(கொழும்பு)

பல வருடங்களாக இடம் பெற்றுவரும்இனப்பிரச்சினை குறித்த யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவருவது தொடர்பான மதிப்பீடொன்றை நடத்துவதற்குதமது அமைச்சு நடவடிக்கை எடுத்து வருவதாக புனர்வாழ்வு மீள்குடியேற்ற அகதிகள் விவகார அமைச்சச டாக்டர் ஜயலத் ஜெயவர்த்தனா கடந்த வெள்ளிக்கிழமை செய்தியாளர் மாநாடொன்றில் உரையாற்றும் போதுதெரிவித்துள்ளார்.

அகதிகள் புனர்வாழ்வுக்கான ஐக்கிய நாடுகள் ஆணையகம், குடிசனமதிப்பீட்டுந்திணைக்களம் ஆகியவற்றின் உதவியுடன் மேற்கொள்ளவிருக்கும் இம் மதிப்பீட்டிற்கு எட்டு மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாகவும்தெரிவித்துள்ளார். (உ- 8)

## போற்றுதையா இன்று

மறக் குலத்து வேங்கையரே வாங்க - தமிழ்
மண்ணை மீட்டு மானம் காத்தீர் நீங்க
செருக்களத்தில் உங்கள் ஆடல் கண்டு - இந்த
செகம் எல்லாம் போற்றுதையா இன்று.

க. பூபாலன்

## ஆதரவுக் கூட்டங்கள்

(காரைநகர்)

காரைநகர் பகுதியில், யாழ்ப்பாணத்தில் நடைபெற இருக்கும் பொங்கு தமிழ் நிகழ்வுக்கு ஆதரவான எழுச்சிக் கூட்டங்கள் நடைபெறவுள்ளன.

பொங்குதமிழ் நிகழ்விற்கு ஆதரவினைத் திரட்டுவதே இதன் நோக்கமாகும்.

பாடசாலைகள், சனசமூக நிலையங்கள், வர்த்தக நிலையங்கள், கிராமஅபிவிருத்திச் சங்கங்கள் போன்றவற்றிலும் ஏனைய பொது அமைப்புகளுடனும் இவை தொடர்பாக கலந்துரையாடல் நடத்தத் திட்டமிடப் பட்டுள்ளது.

(உ-246)

## மின் விநியோகம் இடைநிறுத்தம்

(ஊர்காவற்றுறை)

இலங்கை மின்சாரசபையினால் வேலணையில் உள்ள மின்பிறப்பாக்கி மூலம் வழங்

# கிராம சேவையாளர் 60 வயது வரையிலும் சேவையாற்ற முடியும்

## அமைச்சர் அலுவிகார தெரிவிப்பு

(தென்மராட்சி)

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் பணிபுரியும் கிராம சேவையாளர்களின் சேவைக் காலம் 60 வயது வரை நீடிக்கப்படும் என பொது நிர்வாக உள்நாட்டு மறுசீரமைப்பு அமைச்சர் அலுக் அலுவிகார உறுதியளித்துள்ளார்.

அண்மையில் பாராளுமன்றக்கட்டடத்தில் அமைச்சரின் அலுவலகத்தில் அமைச்சரைச் சந்தித்த யாழ்.மாவட்ட கிராம உத்தியோகத்தர் சங்கத்தின் உபதலைவர் ப.வசந்தகுமார், செயலாளர் அ. தனபாலரத்தினம் ஆகியோரிடம் அமைச்சர் இவ் உறுதிமொழியை வழங்கினார்.

தமிழர் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் வீ. ஆனந்தசங்கரி, மாவை

களுக்கு தீர்வுகாணும் பொருட்டு பின்வரும் முடிவுகளை அமைச்சர் அறிவித்துள்ளார்.

- கிராம சேவையாளர் பதவிக்கு ஆட்களைத் திரட்டுவதற்கு போட்டிப் பரீட்சையை நடத்துதல்.
- 15 வருட் சேவையைப் பூர்த்தி செய்தவர்களை நேர்முகப்பரீட்சை மூலம் தரம் 1 க்குப் பதவி உயர்வு வழங்கல்.
- 1998 ஆம் ஆண்டு ஜூன் மாதம் முதல் 1999 டிசம்பர் மாதம் வரையிலான 18 மாதகாலத்துக்கு இடர்காலக் கொடுப்பனவு வழங்கல்.
- பதில் கடமைக்கான வேதனம் 50 வீதமாக வழங்கல்.
- வருடாந்த தபால் செலவு ரூபா 600 ஆக வழங்கல்.

... இரண்டாமவர் சிறிதும் எதிர்பாராத வேளையில் இப்படி ஒரு கேள்வி. திடுக்குற்றார். தன்னை குறைத்துக் கொள்ள விரும்பாதவர்.. ஒவ்வொரு பாதச்சுவடுகளுக் கிடையிலும் வெட்டப்பட்டே இருக்கும். மறந்துவிட வேண்டாம்.

அதிபர் எ. அரசனார்

# உதவிகள் அற்ற நிலையில் 8 ஆயிரத்து 30குடும்பங்கள் தென்மராட்சியில் தவிப்பு

(தென்மராட்சி)

தென்மராட்சி பிரதேசத்தில் இவ் வருடம் மார்ச் மாதம் வரை 8 ஆயிரத்து 30 குடும்பங்களைச் சேர்ந்த 28 ஆயிரத்து 898 பேர் மீளக் குடியமர்ந்துள்ளனர் எனத் தெரியவருகின்றது.

யுத்தத்தினைத் தொடர்ந்து இருவருடங்கள் இடம் பெயர்ந்து வாழ்ந்துதற்போது மீளக்குடியமர்ந்துள்ள இக் குடும்பங்களுக்கு அரசாங்கம் இது வரை மீள் குடியமர்வுக்கான நிதியுதவியோ, பொருளுதவியோ அல்லது நிவாரணப் பொருள் உதவியோ வழங்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இதே வேளை கடந்த அரசாங்கத்தின் ஆட்சியின்போது கைதடி பிரதேசத்தில் மீளக் குடியமர்ந்த சுமார் 2 ஆயிரத்து 500 குடும்பங்களுக்கு, 15 ஆயிரம் ரூபா நிதியுதவியும் மீளக்குடியமர்வுக்கான நிவாரணப் பொருட்களும் வழங்கப்பட்டன.

இது பற்றி தென்மராட்சியில் மீளக்குடியமர்ந்துள்ள குடும்பங்கள் தென்மராட்சி பிரதேச செயலரிடம் புகார் தெரிவித்துள்ளனர். (க-77)

இலங்கை மின்சாரசபையினால் வேலணையில் உள்ள மின்பிறப்பாக்கி மூலம் வழங்கப்பட்ட மின்சாரம் இடைநிறுத்தப்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது.

இவ்விடயம் தொடர்பாக பொது மக்கள் சம்பந்தப்பட்டவர்களுடன் தொடர்பு கொண்ட போது, குறிப்பிட்ட வீதியில் பலர் களவாக மின்சாரம் பெறுவதை அறிந்தமையினால் மின்சார விநியோகம் இடைநிறுத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் ஒழுங்காகப் பணம் செலுத்தி சட்டரீதியாக மின்சார வசதியினைப் பெற்றுவந்த 50ற்கு மேற்பட்ட குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

(உ-75)

பாராளுமன்ற உறுப்பினர்கள் வீ. ஆனந்தசங்கரி, மாவை சேனாதிராஜா, ந. ரவிராஜ் மற்றும் க. கிருஸ்ணபிள்ளை ஆகியோரும் இச்சந்திப்பில் கலந்து கொண்டிருந்தனர்.

மேலும், சேவையில் இருந்து 58 வயதில் ஓய்வு பெற்ற கிராம சேவையாளர்களுக்கு இரண்டு சம்பள ஏற்றங்களை வழங்கவும் அமைச்சர் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

அத்துடன் வடக்கு-கிழக்கு மாகாணங்களில் பணிபுரியும் கிராம சேவையாளர்கள் எதிர் நோக்கிவருகின்ற பிரச்சினை

கல்.

- வருடாந்த தபால் செலவு ரூபா 600 ஆக வழங்கல்.
- சீருடை, காகிதாதிகள் இரட்டிப்பாக வழங்கல்.
- 1995 ஆம் ஆண்டு காலத்தில் முகாம் பார்வையிடல் பணியில் ஈடுபட்டவர்களுக்கு மாதாந்தம் ரூபா 400 வீதம் வழங்கல் என்பவையாகும்.

இச்சந்திப்பின் போது கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த ஐந்து கிராம சேவையாளர்களும் பங்குபற்றியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும். (க-77)

# 'ரிடா' அமைப்பு வன்னியில் உதயம்

(கொழும்பு)

வன்னிப் பகுதியிலுள்ள ஒவ்வொரு பிள்ளையையும் கல்வி கற்றலில் இணைக்கும் செயற்பாட்டு திட்டம் ஒன்றை 'ரிடா' என்றழைக்கப்படும் கிராமிய பொருளாதாரகல்வி ஆய்வு அபிவிருத்தி நிறுவனம் அறிமுகப்படுத்தியுள்ளது.

அடிப்படைக்கல்விகற்றலில் சிறுவர்கள் அனைவரையும் இணைக்கும் இச் செயற்பாடானது போர் சூழலால் கற்றலை தொடங்க முடியாத தொடர முடியாத சிறுவர்களுக்கு பெரிதும் உதவுவதாக அமையும் என 'ரிடா' நிறுவனம் அறிவித்துள்ளது.

(க-03)

## சிந்தனைக்கு விருந்து

### உபத்திரவங்கள் கொடுப்போர்

ஊருல கறிய வாழ்ந்தவர் கந்தர்
உத்தமர் தந்நலம் அற்றார்
வாரியே வழங்கும் வள்ளலாய் உயர்ந்து
மறைந்தனர் அவரது மேன்மைப்
பேரினைக் கெடுக்கும் வகையினில் மைந்தர்
பெருங்கொடும் செய்கைகள் புரிந்தே
ஊரினில் உலவும் பேய்களை ஒத்தார்
உபத்திர வங்களைக் கொடுப்பார்.

-பழையவன்

## வெற்றிக் கனிகளே வருகவே

வெற்றியின் மறுபெயர் பிரபாகரன்
வேங்கையின் புனைபெயர் பிரபாகரன்
சத்திய வேள்வியின் அமிழ்தங்களே!
சங்கிலியன் மண்ணுக்கு வருகவே!

சத்தியம் தர்மம் பண்பாடு
சமத்துவம் யாழில் முளைத்திட
நித்தமும் பாய்ந்திடும் நதிகளே
நிம்மதி பூத்திட வருகவே!

வேறு

திரை, விலை, இலஞ்சம், சீதனம்
கொலை, களவு, கள்ளொடு காமம்,
நிரை நிரையாகி யாழில் முளைத்துள்ளன
நீங்களே ஏர்பிடித்து நிலத்தை உழுதிடுங்கள்.

தலைமுறை இடைவெளி தமிழைச் சுமந்திட
தணியாத தாகங்களே வருக! வருக!
இலைமறை காயாக இன்னல்கள் சுமந்தவர்கள்
இதயங்கள் வாழ்த்திட வருக! வருக!

வேங்கை வேந்தனின் வெற்றிக் கனிகளே வருக!
ஏங்கும் தமிழர்களின் இதயக் கனிகளே வருக!
சங்கப் புலவர்களின் தங்கங்களே வருக!
பொங்கு தமிழன் புரட்சிகளே வருக! வருக!

விடுதலைப் புலிகளின் வெற்றிச் செல்வங்களே..
விடிந்திடும் மண்ணிற்கு வருக! வருக!
கொடுமைகள் அழித்திடும் தமிழரின் தாகங்களே..
நிமிர்ந்திடும் மண்ணிற்கு வருக! வருக!

- தமிழீழக்கவிராயர்

# பொருளாதாரத்தில் அரசுக்கும் எதிர்க்கட்சிக்கும் தெளிவான கொள்கை வேண்டும்

## சந்திரா எம்புள்தெனிய

(கொழும்பு)

நாட்டின் பொருளாதாரம் தொடர்பான கொள்கையில் அரசாங்கமும், எதிர்க்கட்சியும் தெளிவோடு இருக்க வேண்டும் என்று இலங்கை வர்த்தக சம்மேளனத்தின் தலைவர் சந்திரா எம்புள் தெனிய தெரிவித்துள்ளார்.

குறுகிய அரசியல் இலாப நோக்கத்திற்காக தான் தோன்றித்தனமான கொள்கைகளைக் கடைப்பிடிப்பது தேசிய பொருளாதாரத்தில் பெரிய பிரச்சினைகளுக்கு வழி வகுக்கும்.

பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கமோ ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கமோ நாட்டின் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்வதில் தனியார் துறைகள் முக்கிய பங்கு வகித்துவருகின்றன என்பதை நன்கு அறியும் என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட இந்த வருடத்துக்கான வரவு செலவு திட்டத்தினை குறுகிய அரசியல் நோக்குடன் விமர்சனம் செய்வது பொருத்தமானதல்ல.

நாட்டின் பொருளாதாரம் சீர்கெட்டுப்போன நிலையில் அதனைக்கட்டிக்காக்க வேண்டிய பொறுப்பு வர்த்தக சமூகத்தினரின் கைகளிலேயேதங்கியுள்ளது எனவும் அவர் தெரிவித்துள்ளார். (எ-8)

## சண்டிலிப்பாய் பிரதேச செயலக நடமாடும் சேவை கமநலசேவை நிலையத்தில்

(மானிப்பாய்)

வலி. தென்மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தின் நடமாடும் சேவை எதிர்வரும் 16 ஆம் திகதி காலை 9 மணி முதல் சண்டிலிப்பாய் கமநல சேவை கேத்திர நிலையததில் பிரதேச செயலர் நா. வேதநாயகன் தலைமையில் இடம் பெறும்.

இச் செயலக சேவையில் சண்டிலிப்பாய் வடக்குகிராம அலுவலர் பிரிவு ஜே-141, சண்டிலிப்பாய் மத்தி ஜே 142 சண்டிலிப்பாய் மேற்கு ஜே 143, மாகியப்பிட்டி ஜே 144 ஆகிய கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த மக்கள் தமது தேவைகளைப் பெற்றுக் கொள்ளலாம்.

இங்கு தேசிய விசேட அடையாள அட்டை பொதுசன மாதாந்த உதவிப் பணம் உணவு, முத்திரை, ஓய்வூதியம் மோட்டார் போக்கு வரத்து சம்மந்தமான அலுவலர்கள் மற்றும் பிற திணைக்களங்களான சுகாதாரம் மின்சாரம், விவசாயம், கல்வித் திணைக்களம் கால் நடை உற்பத்தி பிரதேச சபை தேசிய வீடமைப்பு அதிகார சபை கடற்றொழில் அலுவலகம் நீர்ப்பாசனத் திணைக்களம் வீதி அபிவிருத்தித் திணைக்களம் சிறுவர்நன்னடத்தை ஆகிய திணைக்களங்களும் பங்கு பற்றவுள்ளன. (க-120)

## வருடாந்த அபிஷேகம்

(கொழும்புத்துறை)

புங்கன் குளம் வில்லையடி ஸ்ரீ நாகபூஷணிஅம்மன் ஆலய வருடாந்த அபிஷேகம்கடந்த 28-ஆம் திகதி ஆரம்பமாகி தொடர்ந்து 11 தினங்கள் நடை பெற்று வருகின்றது.

இறுதி நாளான இன்று அம்மனுக்கு விஷேச அபிஷேக ஆராதனைகள் நடைபெற்று நண்பகல் அன்னதானமும் இடம் பெறவுள்ளது. (செ-223

## இன்று குளிர்த்தி வைபவம்

(கோப்பாய்)

கோப்பாய் மத்தி முத்துமாரியம்மன் ஆலயத்தின் வருடாந்த குளிர்த்திவைபவம் இன்று திங்கட் கிழமை நடைபெறவுள்ளது. நண்பகல்மகேஸ்வர பூசையும் இடம் பெறவுள்ளது. (க-79)

## இடமாற்றம்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம்கல்வி வலய அலுவலகத்தில் நிர்வாக அதிகாரியாக கடமையாற்றிய ச.வீரசிங்கம் கடந்த 1 ஆம் திகதி முதல் கோப்பாய் பிரதேச செயலகத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

பொது எழுதுவினைஞர் சேவையின் அதி சிறப்பு வகுப்பைச் சேர்ந்த உத்தியோகத்தர் இவர் என்பது குறிப்பிடத்தக்கது. (க)

## தென்மராட்சி கல்வி அபிவிருத்திக்கு 10 மில்லியன் ரூபாக்கள் அமைச்சர் தெரிவிப்பு

(தென்மராட்சி)

தென்மராட்சி பிரதேசத்தின் கல்வி அபிவிருத்திப் பணிக்கு றான் அமைப்பு மூலம் 10 மில்லியன் ரூபாவை வழங்குவதற்கு புனர்வாழ்வு அகதிகள் மீளக்குடியமர்வு அமைச்சர் டாக்டர் ஜயலத் ஜெயவர்த்தனா வாக்குறுதியளித்துள்ளார்.

தென்மராட்சி மக்கள் நலன் சேவைச் சங்கத்தின் முயற்சியினால் கிடைக்கப்படவுள்ள இந்நிதி யுத்தத்தினால் சேதமடைந்துள்ள சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி சாவகச்சேரி மகளிர் கல்லூரி மட்டுவில் மகாவித்தியாலயம், கமலாசனிவித்தியாலயம் ஆகிய பாடசாலைகளின் புனரமைப்புக்குப் பகிர்ந்து வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (க-77)

## உல்லாசப் பயணிகள் தடையின்றி யாழ்.வரலாம் அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

யாழ் குடாநாட்டின் வாயிலாகக் கருதப்படும்எ-9பாதை திறக்கப்பட்டதும் எவ்வித தடையுமின்றி உல்லாசப் பயணிகள் யாழ்ப்பாணம் வருவதற்கு அனுமதிக்கப்படுவார்கள் என்று உல்லாசப் பயணத் துறை அமைச்சர் காமினி லொக்குகே தெரிவித்துள்ளார்.

உல்லாசப் பயணிகளும் வெளிநாடுகளிலிருக்கும்யாழ். குடாநாட்டைச் சேர்ந்தோரும் இங்கு வருவதற்கு ஆர்வமாக உள்ளதாக குறிப்பிட்ட அமைச்சர் அவர்கள் வருவதற்கான சகல தடைகளையும் நீக்குவதாகத் தெரிவித்தார்.

இவர்களின் வசதிக்காக உல்லாச ஹோட்டல்களைத் திறப்பதற்கு நடவடிக்கை எடுக்கப் போவதாகவும் அவர் தெரிவித்தார். (எ-5)

## தினசரி 200பேர் வருகை

(தென்மராட்சி)

கைதடி அரசினர் ஆயுள் வேத வைத்தியசாலைக்கு சிகிச்சை பெறுவதற்கு தற்போது நாளாந்தம்சுமார் 200

## யாழ், வரும் விடுதலைப்புலிகளை வரவேற்கும் வகையில் வடமராட்சியில் ஏற்பாடு

### வாகன தொடரணியும் புறப்படும்

(மந்திகை)

இன்றுயாழ்ப்பாணம்வருகை தரும் விடுதலைப் புலி உறுப்பினர்களை வரவேற்கும்வகையில் வடமராட்சியில் உள்ள

அங்கிருந்து முகமாலைப் பகுதியிலிருந்து அழைத்து வரப்படும் விடுதலைப்புலிகள் பிரமுகர்களுடன் வடமராட்சி

உல்லாசப் பயணிகளும் வெளிநாடுகளிலிருக்கும்யாழ்.

எடுக்கப் போவதாகவும் அவர் தெரிவித்தார். (எ-5)

வேத் வைத்தியசாலைக்கு சிகிச்சை பெறுவதற்கு தற்போது நாளாந்தம்சுமார் 200 பேர் வருகை தருகின்றனர் என வைத்தியசாலையின் பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், வைத்தியசாலைக்கு சுமார் 19லட்சம் ரூபா பெறுமதியான மருந்து வகைகள் அண்மையில் கிடைத்துள்ளன என்றும் வைத்தியசாலைக்கு அவசியமாக ஒரு நீரிறைக்கும் யந்திரம் தேவைப்படுவதாகவும் குறிப்பிட்டார்.

(க-77)

தரும் விடுதலைப் புலி உறுப்பினர்களை வரவேற்கும்வகையில் வடமராட்சியில் உள்ள பொது அமைப்புகள் விரிவான முறையில் ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளன.

வடமராட்சியில் ஒன்று கூடும் வாகனத் தொடரணி துன்னாலை கலிகைச் சந்தியிலிருந்து ஆரம்பமாகி கொடிகாமம் மாவீரர் துயலும் இல்லத்தை சென்று அடையும்.

வரப்படும் விடுதலைப்புலிகள் பிரமுகர்களுடன் வடமராட்சி மக்களும் இணைந்து நல்லூர் நோக்கி வருகை புரிவர்.

இதேவேளையில்விடுதலைப் புலி உறுப்பினர்களை வரவேற்கும் வகையில் பதாகைகள்,சுவரொட்டிகள் போன்றன வடமராட்சி பகுதி எங்கும் பரவலாக காணப்படுகின்றன. (க-23)

# வடக்கு-கிழக்கு சிங்கள பாடசாலைகள் அபிவிருத்திக்கு திட்டம்

(கொழும்பு)

வட-கிழக்கு மாகாணத்திலுள்ள சிங்கள மொழி மூலம் பாடசாலைகளை திட்டமிடப்பட்ட முறையில் அபிவிருத்தி செய்வதற்கு மூன்றாண்டு திட்டம் ஒன்றை வகுத்து செயற்பட உள்ளதாக வடக்கு-கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் ஐ.எம். இஸ்ஸதீன் தெரிவித்துள்ளார்.

வட-கிழக்கு மாகாணத்தில் உள்ள மூன்று இனப் பாடசாலைகளும் இன, மத, மொழி பேதம் பாராது அபிவிருத்திச் செயற்திட்டத்தினுள் உள்ளடக்கப்படுவதுடன் அதற்கான வளங்களும் வழங்கப்பட வேண்டும் என மாகாண கல்விச் செயலாளர் க. சண்முகலிங்கம் மாகாண கல்வித் திணைக்களத்தை பணித்துள்ளார். (க-03)

# மது அருந்திய சிறுவன் பரிதாப மரணம்

(மட்டக்களப்பு)

இரண்டு வயதுச் சிறுவன் ஒருவன் மதுபானம் அருந்தியதால் மரணமாகியுள்ளான்.

மேற்படி சம்பவம் மட்டக்களப்பு ஆயித்தியமலை கிராமத்தில் நடைபெற்றுள்ளது.

தந்தை அருந்திவிட்டு வைத்த மதுவை அருந்திய சிறுவன் இருமியதாகவும் பின் மயக்கமடைந்ததால் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின் மரணமாகியுள்ளான் எனவும் பிரஸ்தாப சிறுவனின் பெற்றோர் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-03)

## மிதிவெடிகளை அகற்றக் கோரிக்கை

(மீசாலை)

கொடிகாமத்திலிருந்துசாவகச்சேரிக்குச்செல்லும் வீதிக்கு இடையிலுள்ள கச்சாய்வீதியிலும்,அந்த வீதியை அண்மித்த வீதிகளிலும் உள்ள மிதிவெடிகளையும், முட்கம்பி வேலிகளையும் அகற்றி உதவுமாறு அப்பகுதிமக்கள்கச்சாய் சிவில் அதிகாரியிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். முப்பதுக்கு மேற்பட்டோர் கையெழுத்திட்டு மேற்படி அதிகாரிக்கு எழுதிய கடிதத்தில் குறித்த கோரிக்கையை அவர்கள் விடுத்துள்ளனர்.

(எ•248)

# ஐ தே க-வின் தீர்வுமுயற்சிக்கு பொதுஜனஐக்கியமுன்னணி தடையாக இருக்காது

## மகிந்த மீண்டும் தெரிவிப்பு

(கொழும்பு)

ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தினால் முன்னெடுத்துச் செல்லப்படும் சமாதான முயற்சிகளுக்கு பொதுஜனஐக்கிய முன்னணி ஒருபோதும் தடையாக இருக்கமாட்டாது என எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ மீண்டும் வலியுறுத்தியுள்ளார்.

களனியில்நடைபெற்றசமய சடங்கொன்றில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இனப்பிரச்சினை சம்பந்தமாக எடுக்கப்படும் முடிவுகள் யாவும் எந்தவொரு இனத்துக்கும் அநீதியை ஏற்படுத்தக் கூடியதாக இருக்கக் கூடாது.

அதேநேரம், வடக்கு கிழக்கு பிரதேசங்களில் வாழும் மக்களின் உரிமைகளை பாதுகாப்பதாகவே இவ்முடிவுகள் அமைய வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார். (க-08)

நன்மையும் தீமையும் நாடி நலம்புரிந்த
நன்மையான் ஆளப்படும்.
- குறள்

# வலம்புரி

## புதியதோர் பரிமாணம்

யாழ். குடாநாட்டிற்கான தரைவழிப்பாதை இன்று சம்பிரதாய பூர்வமாகத் திறந்து வைக்கப் படுகிறது. அரசுக்கும்–விடுதலைப் புலிகளுக்குமிடையே ஏற்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தம் இப்பாதை திறப்புக்கு வழி கோலுகிறது. புரிந்துணர்வு ஒப்பந்தத்தை அடுத்து தமிழர் தாயகத்தில் அரசு மேற்கொள்ளும் தற்போதைய நடவடிக்கைகள் அடிப்படைப் பிரச்சினைகளை நிவர்த்தி செய்யும் பணியாகவே அமையும். விடுதலைப் புலிகளின் கொள்கையின் பிரகாரம் முதலில் தமிழர்களின் வாழ் நிலங்களில் இயல்பு நிலை ஏற்படுத்தப்பட வேண்டும். தமிழ் மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்பட வேண்டும். அதன் பின்னரே உரிமைப் பிரச்சினை பற்றிப் பிரஸ்தாபிக்க முடியும். இதன் அடிப்படையிலேயே பொருளாதாரத் தடை நீக்கம்–குடாநாட்டிற்கான தரை வழிப்பாதை திறப்பு என்பன அரசினால் மேற்கொள்ளப் படுகிறது.

அரசு முன்னெடுத்துச் செல்லும் இயல்பு நிலைகள் நீடிக்கப்பட வேண்டுமாயின் விடுதலைப் புலிகள் மீதான தடைநீக்கப்படுவதும் அவர்களுடன் சமாதானப் பேச்சுக்களை விரைவுபடுத்துவதும் மிக மிக அவசியமாகும்.

இன்று ஏ – 9 பாதை (யாழ். கண்டி வீதி) திறக்கப் படுவதோடு விடுதலைப் புலிப் போராளிகளும் யாழ்ப்பாணம் வரவுள்ளனர். யாழ்ப்

# வள்ளுவர் வகுத்த வாய்மை நெறிக்கிணங்க

# வாழ்க்கையை அமைத்திடில் துன்பம் அகன்றிடும்

**கோ. கோகிலரதன்**
யாழ். பல்கலைக் கழகம்

திறக்குறள் அறத்தினை உணரத்தலைப் படுபவர்க்கு ஒரு பேர் அறநூல், அரசியலை அவாவுவோர்க்கு அரசியல் நூல், ஞானத்தினை விரும்வோர்க்கு ஞானநூல் கவிச்சுவை விரும்பும் வோர்க்கு காவியம், முக்திப்பேற்றை விரும்புவோர்க்கு முக்திக்கு வித்திடும்நூல், இத்தனை வகையாலும் சிறப்புப் பெறும் வள்ளுவம்காட்டிய வாழ்க்கைநெறிபற்றி நோக்குவோம்.

### வாழ்க்கை என்பது

வாழ்க்கை என்றால்என்ன? வாழ்க்கைநெறி என்றால் என்ன? அது எப்படி அமைய வேண்டும் என வள்ளுவரே காட்டினார். வாழ்க்கை என்பது எப்படியும் வாழலாம் என எண்ணாது (நடவாது) இப்படித்தான் வாழவேண்டும் என்னும் நியதியுடன் கண்டதே காட்சி கொண்டதே கோலம் என்ற நிலைமாறி வையத்துள் அன்பு, கருணை, அடக்கம், பொறுமை, சான்றாண்மை, பண்புடைமை, உண்மை, நேர்மை, ஒழுக்கம், மானம் முதலிய மாண்புமிகு பண்புகள் பின்புலத்தே வரையாது நின்றொலிக்க வாழ்வாங்கு வாழுதலேயாகும்.

இவ்வாழ்க்கை நெறி பற்றி வள்ளுவர் கூறும் பொழுது அவர் இரு வகையாக வாழ்க்கைக் காட்டுகிறார். ஒன்று இல்லறம் மற்றயது துறவறம் ஆயினும் வள்ளுவர் காட்டும் வாழ்வில் ஒருபடி உயர்ந்து நிற்பதும் இல்லறமே என்கிறார். இதனாலேயோ என்னவோ

'அறம் எனப்பட்டதே இல் வாழ்க்கை' என்றார்.

### ஊன்று கோல்

இவ்வகையில் அவர்காட்டும் வாழ்வில் இல்லறம் எப்படி அமைய வேண்டும் என்றால் வழுக்கல் மிகுந்த பிரதேசத்தை நாம் கடக்க வேண்டும் எனில் நம் கால்களை மட்டும் நம்பிப் பிரயோசனம் இல்லை. ஒரு ஊன்றுகோலின் உதவியும் வேண்டும். அவ்வாறு ஊன்றுகோல் இன்றி இவ்வழுக்கல் பிரதேசத்தை கடக்க எண்ணிமுடமாகாமல் தப்புவதற்கு இடமே இல்லை. இங்கு வள்ளுவர் வழுக்கற் பிரதேசம் என ஒப்பிட்டுக்காட்டுவது ஒருவன் அனுபவமற்ற உள்ளத்தால் பார்க்கும் இந்த உலகத்தை அதில் அவன் வழுக்கி விழுந்து முடமாகாமல் தப்புவதற்கு சான்றோரின் அறிவுரைகளே ஊன்றுகோலாக அமையும் என்கிறார்.

### வினைப்பயனே வாழ்வு

எதற்கும் அஞ்சாத தன்மையே ஆண்மை 'இடுக்கண் வருங்கால் நகுக' என்றுசொல்லுகிறது ஏன்? அந்த இடுக்கண்களை வெல்லுவதற்கு அது தான் உபாயம். 'இடும்பைக்கு இடும்பை(டுப்பர்)' இடுபைக்கு இடுபைப்படாதவர்' எதற்கும் பயப்பட வேண்டிய அவசியம் இல்லை. ஆர்எனில்அதனைத் தாங்குகின்ற ஆண்மையும் உறுதியும் படைத்தவர்கள் என்று மனித மனத்தின் உறுதித் தன்மையைக் காட்டுகின்றார். ஆனால் எதிர்ப்புக்களைக் களைந்து வெற்றியை அடைகின்ற தன்மை எல்லோருக்கும் உண்டாகுமா? என்ற கேள்வி எல்லோர் மனதிலும் எழுவது இயல்பே. நம்மைப் போன்ற சாதாரணமானவர்கள் இந் நிலையை அடைய முடியுமா? வள்ளுவர் நமக்கு ஆறுதல் அளிக்கிறார்.

'அருமையுடைத் தென்று அசாவாமை வேண்டும் பெருமை முயற்சி தரும்' நம் வாழ்வைச் சீர்மை செய்கின்றவர் நாமே ஏனெனில் நாம் முற்பிறவியிற் செய்த வினைப் பயனுக்கு ஏற்பவே நம் பிராரத்துவம் அமைகிறது. பிராரத்துவ வினையே நம்முடைய இவ்வுலக வாழ்வாகின்றது. எனவே தன்னுடைய வாழ்வில் கண்ணும் கருத்துமாக இருப்பவன் வெற்றி பெறுகின்றான். இதனை 'உலைதின்றித் தாழாது உஞற்றுபவர், ஊழையும் உட்பக்கம் காண்பர்' என்றும்.

'தெய்வத்தால் ஆகாது எனினும் முயற்சி தன் மெய்வருந்தக்கூலி தரும்' என்றும் கூறுவார்.

இல்லறத்திலே வாழுகின்ற மானிடர் பஞ்ச ஐக்ஞங்களை மேற்கொண்டு அதன் படி ஏனைய நான்கு ஆச்சிரமங்களிலே வாழுகின்றவர்களுக்கும் உதவுவதே இவர்களது இலக்காகும் இதனை

'இல்வாழ்வான் என்பான்
இயல்புடைய மூவர்க்கும்
நல்லாற்றில் நின்ற துணை'

என்கின்றார். இதனோடு நின்று விடாது இவன் விருந்தினர்களைஉபசரிக்கின்றபோது அனிச்சம் பூவைப் போன்று மிக மென்மையாக வாடாத வகையில் பாதுகாக்க வேண்டும் என்றும் இவ்வேளை அன்பு, கருணை, தாட்சணியம் தயை மிக அவசியமானதுஎனவும் கூறுகின்றார்.

### துன்பம் நீங்குக

வாழ்க்கையில் இன்பம்இருக்கிறது. அதற்கு ஈடாகத் துன்பமும் இருக்கிறது. இரண்டில் துன்பத்தின் சுமை பெருஞ்சுமை வாழ்க்கையில் பெரும்பாலாக இதன் ஆதிக்கம்தான் அதிகம். துன்பம் நேர்ந்த காலத்தில் அரிதாகப் பெற்ற மனிதப்பிறவியேகசந்துபோகிறது. அன்பு வெறுப்பாகிறது செய்யும் காரியங்களில் வேதனை முணுமுணுக்கிறது. உலகமே ஒரு பெரும் சோதனைச் சாலையாக மாறி விட்டதைப்போல் விரக்தி ஏற்படுகிறது. மனைவியின் கருணை நிறைந்த பார்வையும், பசும்பாலின் கொஞ்சும் மழலையும் நஞ்சாகிறது. உடலின் அங்க உடலின் அங்கமெலாம்பெரும் சுமையாகி வாழ்வே இருள் சூழ்ந்ததாகஇயலாமைதொனிப்பதாகஅமைந்துவிடுகின்றது. இன்றைய நிலையில் இழப்பதற்கு இனிமேல் எதுவுமே இல்லை என்ற எண்ணம்கூட உள்ளத்தில் ஓங்கி ஒலிக்கத் தொடங்கிவிட்டது. இதற்கான காரணம் என்ன? நாம் வாழ்க்கை மீது கொண்டுள்ள ஆசையே ஆகும். ஆசையே துன்பத்தின் அடித்தளம் என்கிறதுசித்தாந்தம்அப்பொழுது தான் அதற்கு விடைபகர வருகிறார் வள்ளுவர்.

'வேண்டுதல் வேண்டாமை
இலானடி சேர்ந்தார்க்கு
யாண்டும் இடும்பை இல'

இவ்வகையில் துன்பமற்ற வாழ்வை துய்ப்பதற்கு வள்ளுவர் வகுத்த வாய்மை வழி நின்றுவையத்துள்வாழ்வாங்கு வாழுவோமாக.

## சேவை நலன்

## பாராட்டு விழா

(ஆனைக்கோட்டை)

மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலையில் இருபத்தேழு வருடங்கள் இணை உப அதிபராககடமையாற்றி ஓய்வு பெறும் திருமதி யோ. கமலசிங்கத்திற்கு இன்று மு.ப. 9.00மணிக்கு ஆசிரிய நல்லுறவு மன்றத்தினால் சேவை நலன் பாராட்டு விழா நடத்தப்படவுள்ளது.

# புலிகளின் சமாதான நகர்வுக்கு தமிழ் சமூகம் பூரண ஆதரவு

## யாழ் பல்கலை ஊழியர் சங்கம் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

இன்றைய வரவேற்புநிகழ்வு விடுதலைப் புலிகளே தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிகள்

துக்கு உணர்த்தவும், விடுதலைப் புலிகளின்சமாதானம் நோக்கிய நகர்வுக்கு தமிழ் சமூகம் வழங்கும் ஆதரவை வெளிப்படுத்தவும் உதவும்.

தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: ஏ-09 பாதையூடாக யாழ். மாவட்டத்துக்கு வருகை தரவுள்ள போராளிகளை வரவேற்கும் நிகழ்வு இருண்

லைப் புலிப் போராளிகளும் யாழ்ப்பாணம் வரவுள்ளனர். யாழ்ப்பாணம் வரும் புலி உறுப்பினர்களை வரவேற்பதற்காக யாழ். மக்கள் தயாராகின்றனர். விடுதலைப் புலிகளும், தமிழ் மக்களும் இரண்டல்லர். அவர்கள் பிரிக்க முடியாத உறவைக் கொண்டவர்கள் என்பது இப்போது சிங்கள அரசுகளுக்குத் தெளிவு படுத்தப்பட்டிருக்கும்.

அது மட்டுமன்றி விடுதலைப் புலி அமைப்பைத் தடை செய்த நாடுகளுக்கும் இதுவோர் பலத்த அடியாக அமையும் என்பது உறுதி.

எனவே இன்றைய நாள் தமிழ் மக்களும், விடுதலைப் புலிகளும் இரண்டறக் கலந்த ஒருவரை ஒருவர் பிரிக்க முடியாத உறவைக் கொண்டவர்கள் என்பதை உறுதிப் படுத்தும் நாளாகும்.

மு.ப.9.00மணிக்கு ஆசிரிய நல்லுறவு மன்றத்தினால் சேவை நலன் பாராட்டு விழா நடத்தப்படவுள்ளது.

(செ-201)

இன்றைய வரவேற்புநிகழ்வு விடுதலைப் புலிகளே தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிகள் என்பதை சர்வதேச சமூகத் தலைப் புலிகளின்சமாதானம் நோக்கிய நகர்வுக்கு தமிழ் சமூகம் வழங்கும் ஆதரவை வெளிப்படுத்தவும் உதவும்,

யாழ்.பல்கலைக் கழக ஊழியர் சங்கம் போராளிகளை வரவேற்கும் நிகழ்வு தொடர்பாகவிடுத்தஅறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது.

அவ்வறிககையில் மேலும் ஏ-09 பாதையூடாக யாழ். மாவட்டத்துக்கு வருகைதரவுள்ள போராளிகளை வரவேற்கும் நிகழ்வு இருண்ட ஒரு யுகத்தின் முடிவையும், புதியஒன்றின்ஆரம்பத்தையும் குறித்து நிற்கும் நிகழ்வாக அமையுமெனநம்புகின்றோம்.

இவ்வாறு அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(க)

## தினசரி தியானம்

## பாவனை

எது பாவித்திடினும் அதுவாகி வந்தருள்செய்
எந்தை நீ குறையுமுண்டோ?

- தாயுமானவர்

பகவானே, உன்னை நான் பாவிக்கின்றபொழுது என்னுடைய பவரோகம் மறைகிறது. நின்னையே நினைந்திருக்க அருள்புர்.வாயாக.

அடிக்கடி உன் நெஞ்சத்தில் வரும் நினைவு எது? ஓய்வுவேளையில் உன்நெஞ்சம் எதன் கண் ஓடுகிறது. தனித்திருக்கும் போது உனக்கு உண்டாகும் எண்ணம் யாது? நீ பாவிப்பது மேலானது என்றால் நீ மேல்நோக்கிச் செல்கிறாய். அது கீழானது என்றால் நீ கீழ்மையை நாடுகிறாய். புனிதமான பாவனை ஒன்றே உன்னைப் படிப்படியாய் உயர்த்துகிறது என்பதை நீஓர்ந்து பார்.

ஸ்ரீமத் சுவாமிசித்பவானந்தர்

# பருத்தித்துறை கடற்பரப்பில் குண்டுச் சத்தங்கள்

(மந்திகை)

பருத்தித்துறை கடற்பரப்பில் நேற்று முன்தினம் காலை 8.30 மணியளவில் துப்பாக்கி மற்றும் பெரும் குண்டுவெடிப்புச் சத்தங்கள் கேட்டதனால் அப்பகுதியில் பெரும்பரபரப்பு நிலவியது.

இச்சம்பவத்தை அடுத்து கடற்றொழிலிற்குச் சென்ற கடற்றொழிலாளர்கள் பலரும் உடனடியாகவே கரை திரும்பினர்.

இச் சத்தத்திற்கான காரணம் குறித்த தகவல் எதுவும் இதுவரையில் கிடைக்கவில்லை. (க-23)

## தொலைக் காட்சி பெட்டிகள் வழங்கல்

கோப்பாய் கோட்டத்துக்குட்பட்ட ஐந்து பாடசாலைகளுக்கு சக்தி தொலைக் காட்சி நிறுவனத் தினரால் தொலைக் காட்சிப் பெட்டிகள் வழங்கப்படவுள்ளதாக கோட்டக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

இம் மாத நடுப் பகுதியில் இவை வழங்கப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (க-79)




# விடுதலைப் புலிகளைச் சந்தித்து கலந்துரையாடவுள்ளோம்

## சிவசிதம்பரம் பி.பி.ஸிக்கு பேட்டி

(கொழும்பு)

விடுதலைப்புலிகளுடன் நாங்கள் பேசுவதற்கு ஒன்றுமில்லை எங்களுடன் பேசவே அவர்கள் எம்மை வன்னிக்கு அழைத்துள்ளனர்.

இவ்வாறு தமிழர் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ப.சிவசிதம் பரம் நேற்று பி.பி.ஸிக்கு வழங்கிய பேட்டியில் தெரிவித்தார்.

அப்பேட்டியில் அவர் தொடர்ந்து கூறுகையில் வன்னிக்குச் சென்று விடுதலைப்புலிகளுடன் என்ன பேசுவது என்பதை நாங்கள் தீர்மானிக்கவில்லை அங்கு சென்று அவர்களுடன் கலந்துரையாடும் போது கருத்துக்களை பரிமாறிக் கொள்ள முடியும்.

கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் விடுதலைப்புலிகளின் அழைப்பை ஏற்று அங்கு செல்வதென்று நேற்று தீர்மானிக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார் (த)

மில்க்வைற்

கேட்டு வாங்குங்கள்
எங்கும் கிடைக்கும்
மில்க்வைற் சோப்

மில்க்வைற் சோப்
இண்டஸ்ரியல்ஸ்
527, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
T.P: 3541

## வீர வணக்க துண்டுப்பிரசுரம்

(யாழ்ப்பாணம்)

விடுதலைப்புலிகளின் வன்னி மாவட்ட சிறப்புத் தளபதி லெப்டினன் கேணல் ரவி (குமாரவேல். இரவீந்திரகுமார்)யின் வீரமரணத்திற்கு அஞ்சலி செலுத்தும் வகையில் யாழ்ப்பாணத்தில் வீர வணக் கத்துண்டுப்பிரசுரம் அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளது.(இ)

# வலி வடக்கு மக்கள் மாத இறுதியில் சொந்த இடங்களில் குடியமர்லாம்

## அமைச்சர் மகேஸ்வரன் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

வலி வடக்குப்பகுதியில் காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலையை அண்டிய பகுதியில் இருந்து இடம்பெயர்ந்த மக்கள் இம்மாத இறுதியில் மீண்டும் அப்பகுதியில் குடியமர்த்தப்படவுள்ளதாக இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் தெரிவித்தார்.

நேற்றைய தினம்யாழ் செயலகத்தில் அரச அதிபர் சண்முகநாதன்தலைமையில் நடைபெற்ற கூட்டத்திலேயே அமைச்சர் இதனை தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து கூறுகையில் காங்கேசன்துறை வீதியின் மேற்குப் பகுதியில் இடம் பெயர்ந்த மக்களை மீளக் குடியமர்த்துவதற்கான நடவடிக்கைகள் துரித கதியில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.


இதற்கான அனுமதியினை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க படை அதிகாரிகளுக்கு வழங்கியுள்ளார்.

கடந்த மாதம் 14ம்திகதி யாழ்ப்பாணம் வந்த பிரதமர் குறித்த பகுதிகளை நேரில் சென்று பார்வையிட்டார் இதன் பின்னரே இந்த அனுமதி வழங்கப்பட்டள்ளது.

காங்கேசன் துறையின் கிழக்குப் பகுதியில் இருந்த இடம்பெயர்ந்த மக்களும் படிப்படியாக மீளக் குடியமர்த்தப்படவுள்ளனர்.

மேலும் தென்மராட்சிப் பகுதியில் புதைக்கப்பட்டுள்ள மிதி வெடிகளை இன்னமும் இருபது நாட்களினுள் அகற்றி அப்பகுதியிலும் மக்களை மீளக் குடியமர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதன் பொருட்டே பிரதமரின் அழைப்பின் பேரில் மிதிவெடிகளை அகற்றும் அமெரிக்க நிபுணர்கள் அடங்கிய குழு இங்கு வந்துள்ளது. அவர்கள் விரைவில் தமது பணியை தொடங்கவுள்ளனர் என்று அமைச்சர் மேலும் தெரிவித்தார். (த.10)



கோண்டாவில் இந்து மகா வித்தியாலய மெய்வல்லுனர் போட்டியில் ஒலிம்பிக் தீபம் ஏற்றி மாணவர்கள் சத்தியப்பிரமாணம் செய்கின்றனர்.

### யாழ்- கண்டி...

வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

பாதை திறப்பதற்கு வசதியாக அப்பகுதியில் புதைக்கப்பட்டுள்ள கண்ணிவெடிகள், மிதிவெடிகள் ஆகியன அகற்றப்பட்டிருப்பதாகவும் பாதை திறப்பதற்கு தயாராக இருப்பதாகவும் விடுதலைப் புலிகளின் அரசியல் துறையினர் நேற்று அறிவித்துள்ளனர்.

கடந்த வாரம் முகமாலைப் பகுதிக்கு விஜயம் செய்திருந்த இராணுவத் தளபதி லெப்டினட் ஜெனரல் லயனல் பலகல்லவும் கண்ணிவெடிகள், மிதிவெடிகள் அகற்றப்பட்டு முகமாலைப் பகுதி போக்குவரத்துக்குத் தயார் என்று குறிப்பிட்டிருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இதேவேளை இன்று ஏ-9 கண்டி வீதி திறக்கப்பட்டாலும் பயணி கள் போக்குவரத்து சற்றுக் கால தாமதமாகியே இடம் பெறும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (வ)

# "பிரபா"வுடனான சந்திப்பிற்கு சந்தர்ப்பம் அளியுங்கள்

## சுரேஸ்-ஸ்ரீகாந்தா-குமரகுருபரன் கோரிக்கை

(கொழும்பு)

நான்கு தமிழ்க்கட்சிகளின் கூட்டமைபின் பாராளுமன்ற உறுப்பினர்களை விடுதலைப்புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் 12ம் திகதி வெள்ளிக்கிழமை சந்திப்பதற்கு அழைப்பு விடுத்துள்ளதை நான்கு தமிழ்க் கட்சிகளின் செயலாளர்கள் வரவேற்றுள்ளனர்.

இதேவேளை பாராளுமன்றத்தில் அங்கத்துவம்பெறாத நான்கு தமிழ்க் கட்சிகளின் செயலாளர்களையும் இச் சந்தர்ப்பத்தில் கலந்துகொள்வதற்கு சந்தர்ப்பம் அளிக்குமாறு ஈ.பி.ஆர்.எல்.எவ் சுரேஷ் பிரேமச்சந்திரன், ரெலோ என்.ஸ்ரீகாந்தா அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் என்.குமரகுருபரன் ஆகியோர் தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப்பொறுப்பாளரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர் (வ)

யாழ் மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் சங்க

## பொதுக்கூட்டம்

யாழ்மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் சங்க அனைத்து அங்கத்துவர்களுக்குமான பொதுக்கூட்டம் நாளை(09-04-2002) அன்று காலை 7.30 மணிக்கு யாழ் செயலகத்தின் முன்பு இடம் பெறும். அனைவரையும் ஒன்று கூடுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

குறிப்பு:-1)அன்றையதினம் மட்டுமே மீள்பதிவு் தொழில் அமைச்சின் விண்ணப்ப படிவமும் வழங்கப்படும்.

2)யாழ்மாவட்ட வேலையற்றபட்டதாரிகள் சங்க நிர்வாக சபை உறுப்பினர்களுக்கான அவசரகலந்துரையாடல் இன்று(08-04-2002)திங்கட்கிழமை 12.00மணிக்கு சங்க அலுவலகத்தில் நடைபெறும்.

செயலாளர் தலைவர்

(4951)

### புலிகளிற்கு...

அழைத்துவர மக்கள் அங்கு செல்லுவதற்குரிய ஏற்பாடுகளையும் செய்துள்ளனர். இதே வேளை நீண்டகாலங்களுக்கு பின்னர் கண்டி வீதி திறக்கப்படுகின்றமையும் விடுதலைப் புலிகள் யாழ். மண்ணுக்கு வருவதும் மக்களை இரட்டிப்பு மகிழ்சியில் ஆழ்த்தியுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.(இ)

# வர்த்தக நிலையங்களை...

மங்கையற்கரசி வித்தியாலயத்திற்கு சமூகம் தருமாறும் அங்கிருந்து காலை 7.30 மணிக்கு வாகனங்கள் புறப்படும் என்றும்.

மேலும் பொதுமக்கள் பிற்ப கல் 1மணிக்கு யாழ் வரும் விடுதலைப் புலிகளை வரவேற்பதற்காக நல்லூரிலுள்ள சங்கிலியன் சிலையடியில் ஒன்று கூறுமாறும் கேட்கப்பட்டுள்ளதுடன்.

யாழ் வர்த்தகர்கள் அனைவரும் இன்று தங்களது வர்த்தக் நிலையங்களை மூடாமல் திறந்திருந்து விடுதலைப்புலிகளின் உறுப்பினர்களை வரவேற்குமாறும் கேட்டுள்ளார். (இ)

## கண்ணீர் அஞ்சலி

யாழ் மக்கள் வங்கி பல்கலைக்கழக கிளை முகா

## பெயர் மாற்றம்

### புலிகளின்...

இரட்டிப்பு மகிழ்ச்சியில் ஆழ்த்தியுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.(இ)

யாழ் மக்கள் வங்கி பல்கலைக்கழக கிளை முகாமையாளர் **திருமதி பத்மலோஜினி** ரகு அவர்களின் அன்புத் தாயாரும், மக்கள்வங்கி சாவகச்சேரி கிளை முகாமையாளர் **திரு. துரைசிங்கம்** ரகு அவர்களின் அருமைமாமியாரும் ஆகிய **திருமதி மணி சிவசுப்பிரமணியம்** அவர்கள் காலமானதையிட்டு துயரடைந்துள்ள அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்ளுகின்றோம்.

இராமநாதன் வீதி,
யாழ்ப்பாணம்

உரிமையாளர்
மிலேனியம் ரெஸ்ரோறன்ற்

(C/3914)

**புலிகளின்...**

கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் உள்ள இராணுவத்தினரின் கெடுபிடிகள், தீவிர சோதனைகள் குறித்தும் விரிவாக ஆராயப்பட்டது.

புலிகளின் கிழக்கு மாகாணத் தளபதிகளான கருணாவும் பதுமனும் கிழக்கு மாகாண வரைபடங்களைக் காட்டி கண்காணிப்புக் குழுத் தலைவருக்கு விளக்கமளித்தனர்.

இதேவேளை புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் சட்டம் ஒழுங்கு முறை எவ்வாறு செயற்படுகிறது என்பது தொடர்பாக காவல்த் துறைப் பொறுப்பாளர் பா.நடேசன் விளக்கமளித்தார். (வ)

# பெயர் மாற்றம்

சேந்தான் குளம் இளவாலையைச் சேர்ந்த

ஆசீர்வாதம் யேசுநாயகம் [1974/10/19]
ஜெனிற்றா றூபினா [1972/02/03]
மேரி ஜெனூஷா [1993/07/19]
ஜெனிபன் [1995/03/21]

ஆகிய பெயர்களைக் கொண்ட நாம் 02/03/2001ம் திகதியிலிருந்து புனித இஸ்லாம் மதத்தை தழுவி எமது பெயர்களை

முகம்மத் பைஸல் (தகப்பன்)
சாறா (மனைவி)
ஸஹ்றா (மகள்)
ஹனீப் (மகன்)

என மாற்றியுள்ளோம் இதனை இலங்கை சோசலிச குடியரசின் கீழ் உள்ள சகல மக்களுக்கும் இத்தால் அறியத்தருவதுடன் சகல ஆவணங்களிலும் இனிமேல் எமது புதிய பெயரையே பயன்படுத்துவோம்.

முகம்மத் பைஸல்
தகப்பன்

(4948)

## சூரியநிலாவின் நந்தவனக்காற்று

பாடல் ஒலிப்பதிவு நாடா

**வெளியீட்டு விழா அழைப்பிதழ்**

தயாரிப்பு,இயக்கம்
பாடலாக்கம்
— சூரியநிலா —

இசையமைப்பு
G. அற்புதன்
(திருமறைக் கலாமன்றம்)

காலம்:-இன்று 08-04-2002 திங்கள் மாலை 3.30
இடம்:-நாவலர் கலாசாரமண்டபம்

இந்நிகழ்வில் தவறாது கலந்து கொள்ளுமாறு
அன்புடன் அழைக்கிறோம்.

(C/3911)

வெளியீட்டுக்குழு

## சாயி அக்கடமி

இடம்:-நாச்சிமார் கோவிலடி

A/L 2004

கலை, வாத்தக, கணித,விஞ்ஞானம்
**புதிய பிரிவுகள் ஆரம்பம்.**

காலம்:-10-04-02
நேரம்:-3.00 p.m

O/L DAY CLASSES

காலம்:-10-04-02
நேரம்:-9.00 a.m

(C/3913)

## O/L DAY CLASS

ஆரம்பம்:- 10 - 04 - 2002
(புதன்-7.00மணி)

**நிரு ரியூசன் சென்ரர்**
கோண்டாவில்

(4946)

இப்பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தினரால் இல.15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 08.04.2002ல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.